ISSN 1391-9504

# விஜய்

Vijey විජය

02.11.2011 - மலர் 08, இதழ் 35



## 'ஹஜ்ஜுப் பெருநாள்' வாழ்த்துக்கள்

## வாழைப்பழத்தில் மின்சாரம் உற்பத்தி

## பால் உணவுகள் எவ்வாறு தயாராகின்றன?

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கைதிகளாக்கப்பட்ட ஒல்லாந்த அதிகாரிகள்

கி.பி.1795 செப்டம்பர் மாதம் 19 ஆம் திகதி யாழ்ப்பாண கோட்டையில் இருந்த ஒல்லாந்த அதிகாரிகள் பேச்சுவார்த்தைக்காக அழைக்கப்பட்டனர். 'ரெக்கட்' எனும் ஒல்லாந்த தளபதியும் 39 ஐரோப்பிய படையினரும் 99 இந்திய படையினரும் எதிரிகளின் கைகளில் சிக்கினர். தங்களை கொழும்பிற்கு அனுப்பும்படி அவர்கள் கேட்டுக்கொண்டனர். எனினும், அவர்களை பிரித்தானியர் சிறைப்பிடித்தனர். பிரித்தானியர் கோட்டையை கைப்பற்றியபின் கூலிப்படையினர் பிரித்தானியர்களின்கீழ் சேவையாற்றும்பொருட்டு சேர்க்கப்பட்டனர்.

கி.பி.1795 ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி முல்லைத்தீவு நகரம் 'மொன்சோன்' எனும் யுத்த தளபதியின் தலைமையிலான ராணுவத்தால் கைப்பற்றப்பட்டது. மன்னார் தீவையும் மன்னார் கோட்டையையும் அதே ஆண்டு ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி படைச் சேனாதிபதியாகிய 'பேர்டன் கேஜ் பார்பட்' என்பவர் அடிபணிய வைத்தார். அக்கோட்டையில் இருந்த படை வீரர்களை கொழும்புக்கு அனுப்பும்படி ஒல்லாந்தர் கேட்டுக்கொண்டார். எனினும், அது நிறைவேறவில்லை. அவர்களையும் கைதுசெய்தனர். மற்றொரு படைத் தளப தியாகிய 'பவ்சர்' தலைமையிலான படையணி கல்பிட்டியைக் கைப்பற்றியது. இந்நிகழ்வு அதே ஆண்டு நொவெம்பர் மாதம் 13 ஆம் திகதி நிகழ்ந்தேறியது.

இக்கோட்டையை கைப்பற்றியபின் ஆங்கிலேயர் வரி சேகரிப்பை ஆரம்பித்தனர். அத்தோடு கொழும்பை கைப்பற்றும் நோக்கில் அதனை சுற்றிவளைக்க இந்தியாவின் ராமேஸ்வரத்தில் பெருஞ் சேனையை திரட்டினர். முத்துக் குளிக்கும்பொருட்டு, உடனடி நடவடிக்கைகளில் இறங்கினர். 'பார்பட்' மீண்டும் யாழ்ப்பாணத்தில் இருந்து சில படையணிகளை திரட்டி வந்தார். அப் படை அணிகளை நீர்கொழும்பிற்கு அனுப்பிவைத்தார். கி.பி. 1796 பெப்ரவரி 3 ஆம் திகதி அதனைக் கைப்பற்றினர். அங்கிருந்த ஒல்லாந்த ராணுவம் அவ்வேளை கொழும்பிற்கு தப்பி ஓடி இருந்தன. அந்நேரம் நீர்கொழும்பு சூனியப் பிரதேசமாக காட்சி அளித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒக்டோபர் வரை டெங்குவால் 299 பேர் பலி; 19,774 பேர் பாதிப்பு



இவ்வருடத்தின் ஆரம்பத்திலிருந்து கடந்த ஒக்டோபர் மாத முதல் வாரம் வரை நாடளாவிய ரீதியில் டெங்குக் காய்ச்சலால் 19,774 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 299 பேர் மரணித்துள்ளதாகவும் சுகாதார அமைச்சின் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலிருந்தே, அதிகளவு டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர் என அப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் தற்போது நிலவிவரும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக, டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதனால், நுளம்புப் பெருக்கத்தைத் தடுக்கும் நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்துமாறு தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

# புலமைப்பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளிகள் டிசம்பரில்...

இவ்வாண்டிற்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்குப் பிரபல பாடசாலைகளில் அனுமதியைப் பெற்றுக்கொடுப்பதற்கான வெட்டுப்புள்ளிகளை எதிர்வரும் டிசம்பர் நடுப்பகுதியளவில் வெளியிடுவதற்கு கல்வி அமைச்சு உத்தேசித்துள்ளதாக அறியவருகின்றது.

கடந்த ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற மேற்படி பரீட்சைக்கு நாடளாவிய ரீதியிலிருந்து சுமார் 3 லட்சத்து 21 ஆயிரம் மாணவர்கள் தோற்றியிருந்தனர். அவர்களில் சுமார் 31 ஆயிரம் மாணவர்கள் புலமைப்பரிசில் நிதியுதவியைப் பெறுவதற்கும் பிரபல பாடசாலைகளில் அனுமதியைப் பெறுவதற்கும் தகைமை பெற்றுள்ளனர்.



இதற்கமைய, பிரபல பாடசாலைகளில் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் தற்போதளவில் வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. எனவே, அவற்றைப் பெற்று பூர்த்தி செய்து வலயக் கல்விப் பணிப்பாளர்களினூடாக, இம்மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் கல்வி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# வேலையற்றோர் எண்ணிக்கை 4.3 சதவீதமாகக் குறைவு




இவ்வாண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் இலங்கையில் வேலையற்றோர் எண்ணிக்கை 4.3 சதவீதமாகக் குறைவடைந்துள்ளதாக புள்ளி விபரவியல் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுப் பகுதியில் இலங்கையில் வேலையற்றோர் எண்ணிக்கை 4.4 சதவீதமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# இலவச வினாத்தாள்கள்



தரம் 10,11 ஆகிய வகுப்புகளில் தமிழ் மொழிமூலத்தில் கல்வி கற்கின்ற மாணவர்களின் நலன்கருதி, 'சேர்ஃப் (SERF) ஸ்ரீலங்கா' என்ற அமைப்பு இலவச வினாத் தாள்களை நாட்டின் பல பாகங்களிலும் உள்ள மாணவர்களுக்கு தபால்மூலம் விநியோகித்து வருவதாக அறிவித்துள்ளது. இந்த வினாத் தாள்களைப் பெற விரும்புகின்றவர்கள் 075-2074507 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# சனத்தொகை மதிப்பீடு பிற்போடப்பட்டுள்ளது



எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட இருந்த நாடளாவிய ரீதியிலான சனத்தொகை மதிப்பீடு பிற்போடப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது. இந்த வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாக, இம்மாதம் 24 ஆம் திகதியிலிருந்து டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை வீடு மற்றும் கட்டடக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட இருந்தது.

இந்நிலையில், அதற்காக அச்சடிக்கப்பட்ட மதிப்பீட்டுப் படிவங்களில் ஏற்பட்டுள்ள அச்சுப்பிழைகள் காரணமாக, இப்பணிகளை ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. எனவே, மதிப்பீட்டுப் படிவங்களை மீண்டும் அச்சடிக்க வேண்டியுள்ளதால், மதிப்பீட்டுப் பணிகளைப் பூர்த்தி செய்யக் குறைந்தது 3 மாதங்களேனும் தேவைப்படுமென நிதியமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. சுமார் 30 வருடங்களாக, நாடளாவிய ரீதியில் சனத்தொகை மதிப்பீடு இடம்பெறவில்லை. இலங்கையில் 1991 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் சனத்தொகை மதிப்பீடு இடம்பெற்றபோதும், அதில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உள்ளடக்கப்படவில்லை. எனினும், இவ்வருடத்தில் வடக்கு, கிழக்கு பகுதிகளை உள்ளடக்கியதாக நாடளாவிய ரீதியிலான சனத்தொகை மதிப்பீடு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இடி விமானம்!



'டரானிஸ்' என்று பெயரிடப்பட்டுள்ளதாக அதன் உற்பத்தியாளரான BAE Systems நிறுவனம் தெரிவித்துள்ளது. ஒரு கண்டத்திலிருந்து இன்னொரு கண்டத்தில் உள்ள இலக்கைக்கூட, குறிபார்த்துத் தாக்கும் வல்லமையை இந்த விமானம் பெற்றுள்ளது.



'டரானிஸ்' (Taranis) என்பது, பிரித்தானிய தீவுகளில் வாழ்ந்த பழங்குடி மக்களால் வணங்கப்பட்டுவந்த இடிக்குப் பொறுப்பான கடவுளின் பெயராகும். இப்பெயர் தற்போது ஒரு போர் விமானத்திற்கு சூட்டப்பட்டிருக்கிறது.

வானத்தில் இருந்து பூமியைத் தாக்கும் இடியைப் போல இது மிகவும் சக்திவாய்ந்த விமானம் என்பதனாலேயே அதற்கு


60 Day's BASIC / SPOKEN ENGLISH - தபால் மூல ஆங்கில பாடநெறி
இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி E.L.I யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்
7 வயது தொடக்கம் பெரியோர் வரை அனைவருக்கும் என விசேடமாக தயாரிக்கப்பட்ட BASIC / SPOKEN ENGLISH தபால் மூல பாடநெறி
அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத,வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.

பாடநெறியை தொடரும் உங்களுக்கு
அழகிய T.SHIRT ஒன்று PHONE SIM CARD மற்றும்
30 DAY'S EASY WAY ENGLISH புத்தகம் ஒன்று என்பன
இலவசமாக வழங்கப்படும்

எமது BASIC/SPOKEN / DIPLOMA IN ENGLISH சான்றிதழானது வேலை வாய்ப்பு பெற மற்றும் வெளிநாட்டு தூதரகங்களுக்கு (Embassy ) களுக்கு செல்லுபடியாகும் இதனால் உங்கள் வெளிநாட்டு பயணங்களுக்கும் VISA பெறவும் இது துணையாக அமையும்.
மேலதிக விபரங்களை பெற பெயர்,முகவரியை தெளிவாக 0777-220002 க்கு SmS செய்யுங்கள்
இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண் நோய்களுக்கு நிவாரணமளிக்கும் இயற்கை வைத்தியம்



மனிதனுக்கு மிக முக்கியமான உறுப்பாக காணப்படுவதுதான் கண்கள். ஆழமான எலும்புக் குழிகளுக்குள் பாதுகாப்பாக அமையப் பெற்றுள்ள இக் கண்மணிகள் தூசுத் துகள்கள் உட்புகாதபடி, இமைகளினால் பாதுகாக் கப்படுகின்றது. உரோமங்களும் சேர்ந்து பாதுகாப்புக் கதவுகளாகச் செயற்படுகின்றன. இதனையும் மீறி கண்களில் ஏதாவது தூசுகள், சிறு பூச்சிகள் விழுந்து விட்டால்,




உடனே 'லைசோசைம்' எனப்படுகின்ற நீர்சுரந்து அதனை அகற்றுகின்றது. அத்துடன், கண்ணிலுள்ள நோய்க்குக் காரணியாக அமைகின்ற நுண்ணுயிர் கிருமிகளையும் அழித்து விடுகின்றது. இந்த நீர்சுரப்பியானது, எவ்வேளையிலும் சுரந்தபடி கண்கள் வரட்சியாகாமல் ஈரழிப்பாக வைத்திருக்க உதவுகின்றது. இவை எமது கண்களுக்கு எவ்வித தீங்கும் நேராதபடி இயற்கையாகவே அமையப்பெற்றுள்ள பாதுகாப்புக் கவசங்களாகும்.

கண்ணுக்கான விசேட வைத்தியர்கள் அல்லாத எவரிடமும் நாம் சிகிச்சை பெறும்போது, சிலவேளைகளில் அது பல பாதிப்புக்களை ஏற்படுத்தலாம்.

நமது கண்களில் ஏற்படுகின்ற குறைபாடுகளுக்கு வேறு காரணங்களும் உள்ளன. நாம் சத்து மிக்க உணவுகளை உண்ணாமல் விடுவது, பிழையான பழக்க வழக்கங்களுக்கு ஆளாகுதல் போன்றன கண்நோய்க்கு காரணமாகின்றன. கண் பலம் பெற பாதாம்பருப்பை அரைத்து பாலில் கலந்து குடித்தால் பலன் கிடைக்கும் என இயற்கை மருத்துவமுறை கூறுகின்றது.

கண்வலி ஏற்பட்டால், கருவேலந் துளிரை அரைத்து இரவில் தூங்குவதற்கு முன்னர் கண்களை மூடிக்கொண்டு இமைகளின்மீது வைத்து வந்தால் கண்வலி நீங்கும். மேலும், கண்களை மூடிக் கொண்டு 'எப்சம்' உப்புக் கரைந்த வெந்நீரில் கண்களைக் கழுவி வந்தால் நோய் குணமடையும். வயதானவர்களைத் தாக்கும் 'கண்புரை' எனப்படும் பார்வைக் கோளாறு நீங்க சிறிய வெங்காயத்திலிருந்து வெளியாகும் ஒருவகையான சிறு புகையை கண்களில் படும்படியாக வைப்பதனால் கண்புரை நோய் தீங்கும்.

விற்றமின் A நிறைந்த காய்கறி உணவுகளை அதிகம் உண்டு வந்தால் கண் கோளாறுகளே வராது. முருங்கைக்காய், முருங்கைக் கீரை, பேரிச்சம்பழம் போன்றவற்றைத் தினமும் உண்ணுகின்றபோது, கண்களுக்கு அதிகமான ஊட்டச்சத்து கிடைக்கின்றது. காபோஹைதரேட்டினைக் குறைத்து பழங்கள், கீரைகளை உண்பதால் நிச்சயம் கண்கள் பாதுகாப்புப் பெறும்.

## கண்களுக்கான பயிற்சிகள்

தலையை அசைக்காமல் கண் இமைகளை மேலும் கீழும் வலது-இடது பக்கங்களிலும் சுற்றிச் சுழற்றி விழிகளை உருட்டிப் புரட்டிப் பார்த்து பயிற்சி அளிக்க வேண்டும். இவ்வாறு கண்களை மூடிக் கொண்டு தினசரி காலையிலும், மாலையிலும் இதனைச் செய்து வரவேண்டும். மேலும், மல்லாந்து படுத்தபடி, கண்ணை மூடிக் கொண்டு ஈரத்துணியைக் கண் மீது கட்டும்போது, கண்பார்வை ஒளிபெறும்.

கண்களை இரண்டு கைகளாலும் மூடியபடி கறுப்புநிறத்தை உட்கண்ணால் பார்த்தவாறு மெதுவாகக் கண்களைத் திறக்க வேண்டும். இது கண்களுக்கான ஓய்வுப் பயிற்சியாகும்.

கண்களில் தூசு, புழுதி, பூச்சிகள் உட்சென்றால் அழுத்திக் கசக்குதல் கூடாது. ரோஜா இதழ்களை நீரில் ஊறவைத்து அந்த நீரால் கண்களைக் கழுவுதல் வேண்டும். இவை அனைத்தும் இயற்கையான மருத்துவ முறைகளாகும். இவற்றைச் செய்வதனால் பக்க விளைவுகள் எதுவும் ஏற்படாது. நமது முன்னோர்கள் ஆங்கில மருத்துவம் இல்லாத காலங்களில் இத்தகைய முறைகளைப் பின்பற்றியே ஆரோக்கியமாக வாழ்ந்துள்ளனர்.

**எஸ்.எல்.மன்சூர்**

# வாழைப்பழத்திலிருந்து மின்சாரம்






நாம் அன்றாடம் உண்ணுகின்ற வாழைப் பழத்திலிருந்து மின்சாரத்தைத் தயாரிக்கலாம் எனக் கண்டறியப் பட்டுள்ளது. அதற்கமைய, அழுகி வீணாகிப்போகின்ற வாழைப்பழங்கள்மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யமுடியும் என்பதை அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லண்ட் பல்கலைக்கழகப் பேராசிரியரான பில் கிளார்க்கும் அவரது சகாக்களும் தமது ஆராய்ச்சிகள்மூலம் நிரூபித்துள்ளனர்.

இதன்மூலம் அவுஸ்திரேலியாவில் ஆண்டுதோறும் அழுகிப்போகின்ற சுமார் 20,000 தொன் வாழைப்பழங்களைப் பயன்படுத்தி, 'மெதென்' வாயுவை உருவாக்கி, அதன்மூலம் மின்சாரத்தை உருவாக்க முடியும் என்றும் ஜெனரேட்டர்கள் மின் விசிறி, மின் அழுத்தி, மின் அடுப்பு போன்ற சகல உபகரணங்களையும் இயங்க வைக்க முடியுமெனவும் இந்த ஆய்வாளர்கள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. குயின்ஸ்லண்ட் பல்கலைக்கழக ஆய்வாளர்களின் கருத்தின்படி, சுமார் 60 கிலோ வாழைப்பழத்திலிருந்து, ஒரு மின் விசிறியை 30 மணித்தியாலங்களுக்கு இயங்க வைக்கலாம் எனவும் கண்டறிந்துள்ளனர்.

இப்பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தமது ஆய்வுக்காக, முதலில் தொட்டி ஒன்றைக் காற்றுப் புகாதவண்ணம் அமைத்துக்கொண்டனர். தொட்டியில் பழுதடைந்த வாழைப்பழங்களைப்போட்டு, அதனுடன் வாழைப்பழம் சீக்கிரம் அழுகிப்போவதற்கான வேதிப் பொருட்களையும் சேர்த்து, காற்றுப் புகாதவண்ணம் அதனை இறுக மூடினர். இதனால், வாழைப்பழம் விரைவில் அழுகி, அதிலிருந்து அதிக அளவிலான மெதென் வாயு வெளிப்பட ஆரம்பித்தது. அவ்வாறு வெளிப்பட்ட மெதென் வாயு மூலமாக, அவர்கள் ஜெனரேட்டர் ஒன்றை இயக்கி, அதிலிருந்து மின்சார விசிறி ஒன்றையும் இயக்கினர். இத்தகைய ஆய்வுகளின்மூலம், வாழைப்பழத்திலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்வதில் அவுஸ்திரேலிய ஆய்வாளர்கள் அமோக வெற்றி கண்டுள்ளனர்.

தமது ஆய்வுகூடப் பரிசோதனைகளின்மூலம் இத்தகைய மின்சாரத்தை உண்டாக்கும் முயற்சியில் வெற்றிகண்ட பேராசிரியர் பில் கிளார்க் குழுவினர் தற்போது, பெரிய அளவிலான தொழிற்சாலை ஒன்றை நிறுவி, அதன்மூலம் அதிக அளவிலான மின்சாரத்தை எவ்வாறு உண்டாக்கலாம் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

எது எவ்வாறிருந்தபோதிலும் எதிர்காலத்தில் இச்செய்தியானது, அழுகிய பழங்கள், காய்கறிகள் உட்பட, வீதியோரங்களில் குவிந்து கிடக்கும் குப்பைகளை அகற்றுவதில் பாரிய சிக்கல்களை எதிர்கொண்டிருக்கும் நாடுகளுக்கு மகிழ்ச்சியான செய்தியாகவே இருக்கப்போகின்றது. வாழைப்பழத்திலிருந்து மின்சாரம் கண்டறியப்பட்டதானது, எதிர்காலத்தில் அழுகிப்போகின்ற சகல உணவுப் பதார்த்தங்களிலிருந்தும் மின்சாரத்தை உற்பத்தியாக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.



**ஐ.ஏ.ஸத்தார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையச்சத்தையும் தியாகத்தையும் பிரதிபலிக்கும்

# 'ஹஜ்ஜுப் பெருநாள்'



*உலகவாழ் முஸ்லிம்களைப் பொறுத்தவரையில், பிறந்திருக்கும் இந்த துல்ஹஜ் மாதம் மிகவும் சிறப்பானதொரு மாதமாகும். காரணம், இஸ்லாமிய வருடக்கணக்கின் கடைசி மாதமாகத் திகழும் இந்த துல்ஹஜ் மாதத்தின் பத்தாவது தினத்திலேயே (பிறை பத்தில்) 'ஈதுல் அழ்ஹா' எனும் தியாகத் திருநாளாம் புனித ஹஜ்ஜுப் பெருநாள் கொண்டாடப்படுகின்றது*

ஹஜ்ஜுப் பெருநாளானது, பிரதானமாக இரண்டு விடயங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒன்று- இறையச்சம்; மற்றையது- தியாக மனப்பான்மை. அந்தவகையில், நபி இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) மற்றும் அவரது புதல்வர் நபி இஸ்மாயீல் (அலைஹிஸ்ஸலாம்) ஆகிய இருவரினதும் இறையச்சத்தையும் தியாக மனப்பான்மையையும் பிரதானமாக நினைவுகூருமுகமாகவே 'ஹஜ்ஜுப் பெருநாள்' கொண்டாடப்படுகின்றது.

## சோதனைகளும் வெற்றியும்

நபி இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கும் அவரின் துணைவியார் ஹாஜரா அம்மையாருக்கும் திருமணமாகி பல வருடங்கள் கழித்து நபி இஸ்மாயீல் (அலைஹிஸ்ஸலாம்) மகனாகப் பிறந்தார். குழந்தை பிறந்து சில தினங்களில், அல்லாஹுத்தஆலாவின் உத்தரவிற்கமைய, தாயும் மகனும் பாலைவனத்தில் தனித்து விடப்படுகின்றனர். சில வருடங்கள் கழித்து, அல்லாஹுத்தஆலாவுக்காக தனது மகனைப் பலியிடுமாறு நபி இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு இறை உத்தரவு பிறப்பிக்கப்படுகின்றது. உடனே, நபி இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் சற்றும் தயங்காமல் அதனை நிறைவேற்ற முன்வருகின்றார். அவரது புதல்வரும் இதற்கு முழுமையாக சம்மதிக்கிறார். பின்னர், இஸ்மாயீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்குப் பதிலாக ஓர் ஆட்டைப் பலியிடுமாறு அல்லாஹுத்தஆலா கட்டளையிடுகின்றான். இந்நிகழ்வை நினைவுகூரும் விதத்திலேயே ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையை அடுத்து 'உழ்ஹிய்யா' வழங்கும் நிகழ்வு அமைகின்றது.

நபி இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் வாழ்நாட்களில் ஏற்பட்ட சோதனைகளும் வேதனைகளும் ஏராளம். ஆனால், அவற்றின்போது அவர் பொறுமை காத்து, அல்லாஹுத்தஆலாவிடமே அவற்றுக்காகப் பிரார்த்தித்தார்; இறுதியில் வெற்றியும் பெற்றார். எனவே, இந்த அனைத்து விடயங்களையும் அடிப்படையாக வைத்தே அல்லாஹுத்தஆலா ஹஜ்ஜுப் பெருநாளை ஏற்படுத்திக்கொடுத்துள்ளான். அத்துடன், இவற்றை மையமாக வைத்தே ஹஜ் யாத்திரையும் அமைந்துள்ளது.

## ஹஜ் யாத்திரை

இறையில்லமாம் புனித கஃபாவைத் தரிசிப்பதற்காகவும் அல்லாஹுத்தஆலாவால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய கடமைகளை நிறைவேற்றுவதற்காகவும் ஹஜ் யாத்திரை மேற்கொள்ளப்படுகின்றது.

ஹஜ் யாத்திரையின் முக்கியத்துவத்தை பின்வரும் அல்-குர்ஆன் வசனம் விளக்குகின்றது.

"ஹஜ் செய்திட மக்களுக்குப் பொது அறிவிப்புச் செய்வீராக! அவர்கள் வெகு தொலைவில் இருந்தெல்லாம் நடந்தும் ஒட்டகங்களில் பயணம் செய்தும் உம்மிடம் வரட்டும்; அவர்களுக்காக அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள நன்மைகளை அவர்கள் காணட்டும். (22: 27,28)

ஆகவே, வாழ்நாளில் ஒரு தடவையாவது, புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற வேண்டும் என்பதே அல்லாஹுத்தஆலாவின் ஒவ்வோர் அடியானினதும் மாபெரும் அவாவாக இருக்கின்றது.




## துல்ஹஜ் மாத முதல் 10 நாட்களில் செய்யக்கூடியவை

- ★ அதிகமதிகம் திக்ர் செய்ய வேண்டும்.
- ★ அதிகளவில் தௌபா (பாவமன்னிப்பு) செய்துகொள்ளலாம். ஏனென்றால் இந்த புனித நாட்களிலும் நாம் கேட்கும் தௌபாவை அல்லாஹுத்தஆலா நிச்சயம் ஏற்றுக்கொள்கின்றான் என்று கூறப்படுகின்றது.
- ★ இந்த மாதத்தில் இயன்றளவு நாம் நோன்பு நோற்கலாம். அதிலும் ஒன்பதாவது நாள் நோற்கப்படும் அரபா நோன்பு மிக விசேடமானது (ஆனால், ஹஜ்ஜுப் பெருநாள் கொண்டாடப்படும் பத்தாவது நாளிலும் அடுத்து வரும் 11,12,13 ஆகிய அய்யாமுத்தஷ்ரீக் நாட்களிலும் நோன்பு நோற்பது தடுக்கப்பட்டுள்ளது)
- ★ அல்குர்ஆனை அதிகம் ஓதி பொருள் விளங்கி, அதன் வழி நடக்க முயற்சிக்க வேண்டும்.
- ★ பர்ளுத் தொழுகைகளுடன் அதிகமான ஸுன்னத் தொழுகைகளையும் தொழ வேண்டும்.
- ★ அல்லாஹுத்தஆலாவிடம் அதிகமதிகம் துஆ (பிரார்த்தனை) செய்ய வேண்டும்.
- ★ ஏழைகளுக்கு உதவி செய்வதோடு, ஸதகாவும் கொடுக்கலாம்.

## ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில்...

* ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் ஆரம்பித்து பிறை 11,12,13 ஆகிய நாட்களில் கடைசி நாள் அஸருடைய நேரம் வரை தக்பீர் சொல்வது ஸுன்னத்தாகும்.
* பெருநாள் தினத்தில் குளித்து - ஆடைகளில் சிறந்த ஆடையை அணிவதும் ஆண்கள் நறுமணம் பூசிக்கொள்வதும் நபி வழியாகும்.
* பெருநாள் தொழுகைக்குச் செல்லும்போது உணவருந்தாமல் செல்வதும் நடந்து செல்வதும் கூட்டாக திடலில் தொழுவதும் விரும்பத்தக்கது.
* குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள், அயல்வீட்டாருக்கு பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளலாம். நமது வீட்டில் தயாரிக்கப்படும் விசேட உணவுகளை அவர்களுக்குக் கொடுத்து மகிழலாம்.
* அல்லாஹுத்தஆலாவுக்கு விருப்பமான முறையிலும் ஆகுமாக்கப்பட்ட முறையிலும் பெருநாளைக் கொண்டாடி மகிழ வேண்டும்.



## ஹஜ் தரும் பயன்களும் படிப்பினைகளும்

இறையச்சம், உளத்தூய்மை, ஒற்றுமை, சகோதரத்துவம், சமத்துவம், அர்ப்பணிக்கும் மனப்பான்மை, தியாகம், இறை கட்டளைக்கு கட்டுப்படுதல், பொறுமை, பிறர் நலன் பேணல், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, தாம் செய்த பாவங்களுக்காக அல்லாஹுத்தஆலாவிடம் பாவமன்னிப்புக் கோரல், அவனது அருட்கொடைகளுக்காக நன்றி செலுத்துதல், எத்தகைய சோதனைகளின்போதும் அல்லாஹுத்தஆலாவிடமே உதவி கோருதல் போன்ற நற்பண்புகள் முஸ்லிம்களிடத்தில் தோற்றுவிக்கப்படுவதோடு, கற்றுக்கொடுக்கவும்படுகின்றன. ஆகவே, அல்லாஹுத்தஆலாவின் உதவியால் அத்தகைய பயன்களையும் படிப்பினைகளையும் பெற்றவர்களாய் இவ்வுலகிலும் மறுமையிலும் வெற்றி பெறுவோம்! அனைவருக்கும் புனித ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்கள்.

عيد مبارك

-நுஸ்ஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியான முறையில் செயற்

*நாம் எமது அன்றாட வாழ்வில் பற் பல வேலைகள், சிக்கல்கள், அவதிகள் என பல்வேறு விதமான சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றோம். அவ்வாறான சிரமமான, பரபரப்பான நடைமுறையில் நாம் உரிய வகையில் நடத்தல், அமருதல், நித்திரை செய்தல், பளு தூக்குதல் போன்ற இன்றியமையாத விடயங்களில் சிறிதும் அக்கறை காட்ட முனைவதில்லை. எமது வேலைப்பளுவைக் கருத்திற்கொண்டு, எமது உடல்நலனில் உரிய அக்கறை காட்டுவதற்கு நாம் தவறி விடுகிறோம். இதற்குரிய காரணம் மேற்கூறிய விடயங்களை சாதாரண விடயமாக நாம் கருதுவதேயாகும். எனவே, இவ்வாறான செயற்பாடுகளில் நாம் அதிக அக்கறை செலுத்துவதுடன், நமது உடற் செயற்பாடுகள் பற்றியும் அதன் நடைமுறைகள் பற்றியும் நிச்சயமாக அறிந்திருத்தல் அவசியமாகின்றது*

மேற்கூறிய தொழிற்பாடுகளை பிழையான கோணங்களில் நீண்டகாலம் செய்து வருவோமாயின் எமது உடலும் அதற்கு ஏற்ப வளைந்து கூனிக் குறுகி பிழையான திசைக்கு அல்லது ஒழுங்கற்ற முறையில் வளர ஆரம்பித்து விடுகின்றது. அதனால், சிறு வயது முதல் அனைத்து விதமான தொழிற்பாடுகள், அசைவுகளிலும் முறையான ஒழுங்கமைப்பைத் தெரிந்து அதன்படி இயங்குவது மிகவும் நன்மையைத் தரும். அதுவே ஆரோக்கிய வாழ்வுக்கான வழிமுறையுமாகும்.

## திடகாத்திரமான உடல்

ஆரோக்கியமான, திடமான, ஒழுங்கான உடலமைப்பைப் பெற உடற்பயிற்சிகள், விளையாட்டுக்கள் போன்றவற்றில் தினமும் ஈடுபட வேண்டும். இதன்மூலம் எமது உடலை முறையாகப் பேண முடிவதோடு, ஆரோக்கியமான சுகவாழ்வுக்கும் வழிவகுக்கலாம். அதற்காக, தினமும் குறைந்தது அரை மணி நேரமாவது (30 நிமிடம்) உடலை களைப்படையச் செய்யும் வகையில் உடற்பயிற்சிகளை மேற்கொள்வது மிக நலமானது.

## எவ்வாறு நிற்க வேண்டும்?





சரியான முறையில் நிற்பதானது, தோள் புஜத்தை நிமிர்த்தி, தலையை உயர்த்தி உடற்பகுதியை நேராக்கி நிமிர்ந்து நிற்பதாகும். உடலின் பாரமானது, இரண்டு கால் பாதங்களிலும் சம அளவில் தாங்கக்கூடியதாக இருக்க வேண்டும். ஒரு பக்கத்திற்கு சாய்ந்து ஒரு முழங்காலுக்குப் பாரத்தை ஏற்படுத்தும் வகையில் நிற்கும்போது, முழங்கால் வளைவடைந்து கோணல் நிலை ஏற்படக் காரணமாகின்றது. மிகவும் பொருத்தமான ஏற்புடையதுமான நிலையானது, நிமிர்ந்து நின்று உடலின் அனைத்துப் பகுதிகளையும் நேராக வைத்துக்கொள்வதேயாகும்.

## புத்தகப்பையை தாங்கிச் செல்லும்போது...




புத்தகப் பை அல்லது வேறு பாரமான பையை தோளில் தாங்கிச் செல்லும்போது, ஒரு தோற்பட்டைக்கு மாத்திரம் பாரத்தை (சுமை) ஏற்படுத்தும் விதமாக தொழிற்படுவது பிழையான நடைமுறையாகும். இத்தகைய செயற்பாடு காரணமாக, முள்ளந்தண்டில் பல பிரச்சினைகள் ஏற்படலாம். இன்றைய காலப்பகுதியில் அதிகமான சிறுவர்கள் முள்ளந்தண்டு அல்லது முண்ணான் பாதிக்கப்படும் நோய்க்கு (ஸ்கோலியோஸிஸ்) உள்ளாகியவர்களாக உள்ளனர். முதுகெலும்புப் பகுதி ஒரு பக்கத்திற்கு சாய்வாக வளைவது 'ஸ்கோலியோஸிஸ்' நோய் என்றழைக்கப்படுகின்றது. தோளில் புத்தகப்பையை தாங்கிச் செல்லும்போது, எப்போதும் இரண்டு தோற்பட்டைகளுக்கும் சமநிலையில் பாரம் இருக்கும் வகையில் சுமப்பது முதுகெலும்பைப் பாதுகாப்பதற்குரிய மிகச் சிறந்த வழிமுறையாகும். அத்துடன், உங்களால் சுமக்க முடிந்த அளவு பாரத்தை மட்டுமே சுமந்து செல்ல வேண்டும்.

## பாரத்தைத் தூக்கும்போது...





பாரமான பொருட்களைத் தூக்கும்போது, உடலை முன்நோக்கி வளைத்தபடி சுமப்பது தவறான முறையாகும். மாறாக, எப்போதுமே பொருளை உடலுடன் சேர்த்து வைத்தபடி தூக்கிச் செல்லல் வேண்டும். அத்துடன், தரையில் இருக்கும் பாரமான பொருள் ஒன்றைத் தூக்கும்போது, முழங்காலையும் இடுப்பையும் வளைத்து மெதுவாக முழங்காலை நேராக நிமிர்த்தும் வகையில் பாரத்தை மேல்நோக்கித் தூக்குவதே சரியான முறையாகும். உயரமான இடங்களில் வைக்கப்பட்டுள்ள பாரமான பொருட்களை எட்டி எடுக்கும்போது, விரல்களால் தாங்கிநின்று எடுப்பதும் பிழையான முறையாகும். குறிப்பிட்ட உயரத்திற்கு ஏற்ற கதிரை அல்லது ஏணி போன்ற ஏதாவதொன்றின் உதவியுடன், சரியான திசையில் நின்று பாரத்தை எடுப்பதே சிறந்த முறையாகும்.

## முறையாக நடந்து செல்வோம்




எப்போதுமே நாம் நடந்து செல்லும்போது, சரியானதும் முறையானதுமான ஒழுங்கைப் பின்பற்ற வேண்டும். உடல் நேராக இருக்கும் வகையிலேயே நடக்க வேண்டும். ஏதாவது, பாரத்தையும் சுமந்து செல்வதாயின், இரண்டு கரங்களும் சமநிலையில் தாங்கும் வகையில் சுமை இருக்கவேண்டும். ஒரு கைக்கு மாத்திரம் சுமை அழுத்தம் கொடுக்கும் வகையில் சுமக்கக் கூடாது. இவ்வாறு செய்யும்போது, உடலின் சமநிலை பாதிக்கப்பட்டு, வளைந்து அல்லது சரிந்து காணப்படும். இதனால், உடல் எலும்பு கோணலாகி நோய்களுக்கு ஆளாக நேரிடலாம்.

## முறையாக அமர்ந்து கொள்வோம்




சரியான முறையில் அமர்ந்து கொள்வதற்கு கதிரை போதுமான அளவு உயரத்தில் இருப்பது அவசியமாகின்றது. கதிரையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யடக் கற்றுக்கொள்வோம்

அமர்ந்தவுடன், முழங்கால் பகுதியில் இருந்து கால்கள் 90°c அளவில் நிலத்தைத் தொடும் வகையில் கதிரையின் உயரம் இருக்க வேண்டும். கதிரையில் அமரும்பொழுது கழுத்து மற்றும் தலையை சரியான ஒழுங்கில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒருபக்கம் சரிவாக அல்லது வளைவாக வைத்துக்கொள்வது தவறான முறையாகும். கதிரையில் இருந்து எழும்பும்போது, முதுகெலும்பை நேராக வைத்துக்கொண்டு கதிரையின் முன்னால் நகர்ந்து உடலின் இடுப்புப் பகுதியை சற்று முன்னால் வளைத்து இடுப்பையும் முழங்காலையும் ஒரே முறையில் மேல்நோக்கி நேராக்க வேண்டும்.

## நித்திரை கொள்ளும் சரியான முறை







ஒழுங்கற்ற முறையில் நாம் மெத்தையில் அல்லது தரையில் படுத்துறங்கும்போது, கழுத்திலும் தோள் பகுதியிலும் பல்வேறு உபாதைகள் ஏற்படுவதுண்டு. நீங்கள் எப்போதும் படுக்கும் மெத்தை உயரம் கூடியதாக இருக்கக்கூடாது. எந்நேரமும் இலகுவான முறையில் கீழிறங்கவும் ஏறுவதற்கும் ஏற்ற விதமாக இருக்க வேண்டும். ஒருவர் படுத்துறங்கும் மெத்தை 6 அடி நீளமும் $3^{1/2}$ அடி அகலமும் கொண்டதாக இருக்க வேண்டும். கட்டில் உங்களது உயரத்திற்கு போதியதாக இல்லாவிட்டால், நீங்கள் சுருண்டு படுப்பதற்குப் பழகுகின்றீர்கள். தொடர்ச்சியாக இவ்வாறு சுருண்டு படுக்கும்போது, நாளடைவில் முதுகெலும்புப் பகுதி கோணலடைதல் அல்லது பாதிப்பிற்குள்ளாகும் நிலை ஏற்படுகின்றது.

தலை மற்றும் இரு பக்கங்களிலும் அதிக பஞ்சு மற்றும் நடுப்பகுதியில் பஞ்சு சற்றுக் குறைவான சமநிலையான தலையணையைப் பயன்படுத்த வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட முறையில் உயரமான தலையணைகளை வைத்துப் படுத்துறங்கும்போது, நாளடைவில் கழுத்துப்பகுதியில் வலி மற்றும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. அதேபோன்று, நீண்ட நேரமாக ஒரே திசையில் படுத்துறங்கும்போது உடல் வலி, படுக்கை சுழுக்கு போன்ற பாதிப்புக்கள் ஏற்படலாம். இவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படக் காரணம் தொண்டைப் பகுதியில் 'ஸ்டனோமஸ்டொய்ட்' (Sternomastoid), 'ட்ரெபீபியஸ்' (Trapezius) ஆகிய தசைகள் இழுபடுவதலாகும். நீண்டநேரம் ஒரே திசையில் படுத்துறங்கும்போது, தசை நார்கள் ஒரே திசையில் தளர்வடைந்து தொண்டையில் வலி, வேதனைகள் ஏற்படலாம். அதனால், எப்போதும் படுக்கையில் ஒழுங்காகவும் முறையாகவும் கால், கைகளை சரியான திசையில் வைத்தபடி முறையாகப் படுத்துறங்குவதால் இத்தகைய பாதிப்புக்களில் இருந்து பாதுகாப்புப் பெறலாம்.

## வீட்டு வேலைகளின் போது.....







வீட்டில் வேலை செய்யும்போது, அநேகமானவர்கள் உடலை வளைவாக வைத்தபடி வேலைகளில் ஈடுபடுகின்றனர். இதற்கு காரணம் வீட்டில் உள்ள மேசை, அலுமாரி, பாத்திரங்கள் என்பன தங்களது உயரத்தைவிட குறைந்த உயரத்தில் இருப்பதேயாகும். இதனால், அவற்றின் உயரத்திற்கு ஏற்றபடி உங்களது உடம்பை வளைத்துக்கொள்கின்றீர்கள். இவ்வாறு தொடர்ச்சியாகச் செய்யும் போது, உங்கள் இடுப்பு, கழுத்து மற்றும் எலும்புப் பகுதிகளில் வலி, மற்றும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. அதனால், நீங்கள் வீட்டில் வேலை செய்யும்போது, முதுகெலும்பு, தோள்புஜம், இடுப்புப் பகுதியை தேவையின்றி வளைக்காமல் உங்களது உயரத்திற்கு ஏற்ப பொருட்களை வைத்திருத்தல் அவசியமாகின்றது. உடம்பை நேரான திசையில் வைத்துக்கொண்டு செயற்படும் போது, எலும்புப் பகுதிகளில் ஏற்படும் அநாவசியமான பாதிப்புக் களைத் தவிர்க்கலாம்.

## கற்கும் நேரம்.....







வீட்டில், நூல்நிலையத்தில் அல்லது பாடசாலையில் படிக்கும்போது, உடலை வசதியாகவும் பொருத்தமான கோணத்திலும் வைத்துக்கொள்ள வேண்டும். புத்தகம் வாசிக்கும்போது அல்லது எழுதும்போது உடலை வளைவாக வைத்துக்கொள்வது நல்லதல்ல. புத்தகம் வாசிக்க பொருத்தமான வழி மேசைமீது புத்தகத்தை நிமிர்த்தி சற்று சரிவாக வைத்து அந்த புத்தகம் கண்களுக்கு எதிரே இருக்குமாறு வைத்தலாகும். சாய்வு நாற்காலியில் சாய்ந்து, கட்டிலில் படுத்தவாறு அல்லது கட்டில் விளிம்பில் தலையை வைத்தவாறு புத்தகம் வாசிப்பது தவறான முறையாகும். இடுப்பு மற்றும் கழுத்துப் பகுதி என்பவற்றை நேராக வைத்து கதிரை மேசை என்பவற்றை போதுமான உயரத்தில் வைத்திருப்பது முக்கியமானதாகும்.

## வாகனத்தை செலுத்தும்போது....







வாகனத்தை செலுத்தும்போது, அதற்கு பொருத்தமான முறையில் ஆசனத்தை சரி செய்துகொள்ளவேண்டும். சாரதி ஆசனத்தில் அமரும்போது, இடுப்புக்கு மேல் பகுதியை நேராக வைத்து ஆசனத்தில் சாய்ந்துகொள் ளுங்கள். கழுத்துப் பகுதியை 'ஸ்ட்ரியரிங்வீல்' பகுதிக்கு சுமையாகும் விதமாக வளைக்கக்கூடாது. அதேபோன்று, முன்னோக்கி வளைந்து அமர்ந்துகொண்டு வாகனம் செலுத்தும்போது, கழுத்திலும் முதுகெலும்பு பகுதியிலும் நோவு, வேதனைகள் ஏற்படலாம். எனவே, நீங்கள் செய்யக் கூடிய அனைத்து வேலைகளின்போதும் உங்கள் உடம்பை சரியான முறையில் வைத்திருப்பதே முக்கியமானதாகும். இதனால், பலவிதமான நோய்களில் இருந்து பாதுகாப்பினை நாம் பெறமுடியும்.

**அமீர் ஹுசைன்**

## முட்களையுடைய முள்ளம்பன்றி

உடல் முழுவதும் முட்களைக்கொண்ட முள்ளம்பன்றியானது (Porcupine), ஒரு தாவர உண்ணியாகும். அழிந்துவரும் இனங்களில் ஒன்றாக அமெரிக்காவின் முள்ளம்பன்றி எரிதிஸொன்டிடே (Erithizontidae) காணப்படுகின்றது. உலகின் பழைய இனமான ஹிஸ்ட்ரிசிடே (Hystricidae) தெற்கு ஆசிய நாடுகள் மற்றும் ஆபிரிக்காவில் அதிகளவில் வாழ்கின்றன. 'எரிதிஸொன்டிடே' எனும் இனத்தைச் சார்ந்த முள்ளம்பன்றி கள் தெற்கு, ஈராக்கிலிருந்து ஈரான் வரையிலும், இந்தியாவிலி ருந்து துருக்கிஸ்தான் வரையிலான பிரதேசங்களில் வாழ்கின்றன. மூன்று அடி நீளமான இந்த முள்ளம்பன்றி இனம், $2^{1/2}$ அடி நீளமான ஐரோப்பிய முள்ளம்பன்றிகளை விடப் பெரியது. அதன் முட்கள் பிரகாசமானவை. இதன் உடல் உறுப்பு களான மூக்கு, நாடி என்பன உரோமத்தால் மூடப்பட்டுள்ளன.




இலங்கையில் காணப்படும் முள்ளம்பன்றிகள் ஏனைய இடங்களில் உள்ள முள்ளம் பன்றிகளைவிட, ஓரளவு பெரியவை. அவை கட்டையான பலம் வாய்ந்த கால்களையும் மற்றும் தடித்த உடலையும் கொண்டுள்ளன. அதன் காதுகள் சிறியவை. நீண்ட, தடித்த உரோமத்தால் அவை மூடப்பட்டுள் ளன. விரல்களில் பலம் வாய்ந்த, நகங்கள் காணப்படுவதால், அவற்றால் விரைவாகவும் எளிதாகவும் தரையைத் தோண்ட முடியும். நெற்றியிலிருந்து முதுகின் நடுப்பகுதி வரை அதற்கு முட்கள் காணப்படுகின்றன. பழம், இலை, வேர், கிழங்கு வகைகள் என்பன அவற்றின் முக்கிய உணவுகளாகும். பெண் முள்ளம்பன்றியைவிட, ஆண் முள்ளம்பன்றி உருவில் சற்றுப் பெரிதாகக் காணப்படும். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுதந்திர சதுக்கம்

தலைநகரின் ஒரு பகுதி

உருகுவே சட்டவாக்கல் சபை

# உருகுவே



தேசிய இலச்சினை

**அரசு:** இரு சட்ட சபைகளைக்கொண்ட பல கட்சிக் குடியரசு.

**சுதந்திரம்:** பிரேசில் பேரரசிடமிருந்து பிரகடனப்படுத்தப்பட்டது-1825 ஒகஸ்ட் 25; அங்கீகரிக்கப்பட்டது-1828 ஒகஸ்ட் 28; அரசியலமைப்பு-1830 ஜூலை 18.

**தேசிய பெயர்:** ரிபப்ளிக்கா ஒரியன்டல் டெல் உருகுவே.

**ஜனாதிபதி** (2010): ஜோஸ் முஜிக்கா.

**உப ஜனாதிபதி:** டேனியலோ எஸ்டோரி.



ஜனாதிபதி



உப ஜனாதிபதி

## புவியியல்

தென் அமெரிக்காவின் கிழக்கு மற்றும் மத்திய பகுதியில் அமைந்துள்ளது. அட்லாண்டிக் சமுத்திரத்தில் கடற்கரையைக் கொண்டுள்ளது. இதன் வடக்கில் பிரேசிலும் மேற்கில் ஆர்ஜன்டீனாவும் எல்லைகளாக அமைந்துள்ளன. வடக்கில் உயரம் குறைந்த மேட்டு நிலங்கள் காணப்படுகின்றன. கிழக்கு, தெற்கு மற்றும் மேற்குத் திசைகளில் சமவெளிகளைக்கொண்ட உருகுவேயின் உட்பகுதியில் குன்றுகளும் உயரம் குறைந்த மலைகளும் காணப்படுகின்றன. நாட்டின் தென் மேற்கு மலைப்பிரதேசத்திலிருந்து பல்வேறு நதிகள் உற்பத்தியாகின்றன. இவற்றில் உருகுவே நதி, நெக்ரோ நதி என்பன குறிப்பிடத்தக்கவை.

**மொத்தப்பரப்பு:** 68,039 ச.மைல் (176,220) ச.கி.மீற்றர்.

**நிலப்பரப்பு:** 67,035 ச.மைல் (173,621 ச.கி.மீற்றர்).

**நிலப்பிரிவுகள்:** 19 திணைக்களங்கள்.

**தலைநகரமும் பெரிய நகரமும்:** மொன்டிவீடியோ.

**உயர் மலைச்சிகரம்:** மவுண்ட் கதீட்ரல்-514 மீற்றர்.

**தாழ்மையம்:** அட்லாண்டிக் சமுத்திரம்.

**மக்கள் தொகை** (2010): 3,510,386.

**நாணயம்:** உருகுவே பெஸோ.

**மொழிகள்:** ஸ்பெனிஷ், போர்த்துக்கீஸ் அல்லது பிரேசிலேரோ.


**இனக்குழுவினர்கள்:** வெள்ளையர் 88%, மெஸ்டிஸோ 8%, கறுப்பர் 4%.

**சமயங்கள்:** ரோமன் கத்தோலிக்கம் 66%, புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம் 2%, யூதம் 1%.

**எழுத்தறிவு** (2003): 98%.

**இணையத்தளக் குறியீடு:** .uy

**தொலைபேசி குறியீட்டு இலக்கம்:** +598.



பிரியா கோட்டை



**தேசிய கீதம்**

Orientales, la Patria o la Tumba!
Libertad o con gloria morir!
Es el voto que el alma pronuncia,
Y que heroicos sabremos cumplir!...என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

ஜுவான் டயஸ் டி சோலிஸ் எனும் ஸ்பானியர், 1516 இல் உருகுவேக்கு விஜயம் செய்தார். எனினும், 1680 இல் போர்த்துக்கேயர் இப்பிரதேசத்தில் இருந்த கொலொனியா டெல் சக்ரமென்டோ எனும் நகரைக் கண்டுபிடித்து, அங்கும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் தமது முதல் குடியேற்றத்தை உருவாக்கினர். நீண்ட போராட்டத்தின்பின் 1778 இல் போர்த்துக்கலிடமிருந்து இந்நாட்டை ஸ்பெய்ன் தனதாக்கிக் கொண்டது. எனினும், இங்கு குடியேறிய மக்கள் நீண்டகாலமாக, ஸ்பானியருக்கு எதிராகப் போராடினர். பின்னர் 1817 இல் இந்நாடு பிரேசில் பேரரசுடன் இணைக்கப்பட்டது. 1825 ஒகஸ்ட் 25இல் ஆர்ஜன்டீனாவின் உதவியுடன் பிரேசிலிடமிருந்து சுதந்திரம் பெற்றது. 1828 இல் இந்நாடு குடியரசானது.

1839 முதல் 1851 வரை உள்நாட்டிலும் 1865 முதல் 1870 வரை பராகுவே நாட்டுடனும் யுத்தங்கள் நடைபெற்றன. 1903 முதல் 1929 வரை ஜனாதிபதி ஜோஸ் பெட்ல் வை ஓர்டோனஸ் தலைமையில் நல்லாட்சி நிலவியது. 1973 முதல் 12 வருடங்கள் ராணுவ ஆட்சி நிலவியது. தற்போதைய ஜனாதிபதி ஜோஸ் முஜிக்காவுக்கு முன்னர் தபாரே வால்குஸ் ஜனாதிபதியாகப் பதவி வகித்தார். இவர் உருகுவேயின் 180 வருட வரலாற்றில் முதலாவது இடதுசாரி கம்யூனிஸ்ட் தலைவராவார்.



பெட்ல் பார்க்கில் அமைந்துள்ள கற்சிற்பம்

## கலாசாரம்

உருகுவேயில் உறுதியான ஐரோப்பிய கலாசாரம் நிலவுகின்றது. குறிப்பாக, தென் ஐரோப்பிய கலாசார தாக்கங்கள் மிக அதிகமாகும். கௌச்சோ எனப்படும் பாரம்பரிய கிராமியக் கலைகள் இன்றுவரை பாதுகாக்கப்படுகின்றன. சித்திரம், இசை, நடனம் உள்ளிட்ட கலைத்துறைகளில் இதனைக் காணலாம். எனினும், தற்காலத்தில் பல்வேறு இனக்குழுக்கள் இங்கு வாழ்வதால், பல்கூட்டுக் கலாசாரம் நிலவுகின்றது.

## காலநிலை

லத்தீன் அமெரிக்க நாடுகளிலேயே, வெப்ப வலயத்திற்குரிய காலநிலையைக் கொண்டிராத ஒரே நாடு உருகுவே ஆகும். இங்கு வருடம் முழுவதும் மழைவீழ்ச்சி நிலவும். இந்த மழைவீழ்ச்சியானது, பெரும்பாலும் படிவு வீழ்ச்சியாகவே காணப்படும். பிரகாசமான சூரியஒளியும் மிதமான வெப்பத்துடன் மிகவும் இதமான காலநிலை இங்கு நிலவுகின்றது.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்(2001):** பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்-929,141; செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்கள்: 350,000. **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (2001): AM 91, FM 149, SW 7. **தொலைக்காட்சி ஒலிபரப்பு நிலையங்கள்** (2001): 20. **இணையத்தள வழங்குனர்கள்** (2001): 14; இணையத்தளப் பாவனையாளர்கள்: 400,000.

## போக்குவரத்து

**புகையிரதப்பாதைகள்** (2002): மொத்தம் 2,073 கி.மீற்றர். **பெருந்தெருக்கள்** (1991): மொத்தம் 8,983 கி.மீற்றர். **துறைமுகங்கள்:** கொலொனிய்யா, பென்டொஸ், ஜுவான் லா கேஸி, லா பலோமா, மொன்டிவீடியோ உட்பட, இன்னும் பல. **விமான நிலையங்கள்** (2002): 64.







## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச் செய்கை நிலம்: 8%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** நெல், கோதுமை, சோளம், பார்லி, கால்நடைகள், மீன். **கைத்தொழில்கள்:** உணவு உற்பத்திகள், இலத்திரனியல் இயந்திரங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், பெற்றோலிய உற்பத்திகள், புடவை. **இயற்கை வளங்கள்:** பயிர்ச் செய்கை நிலம், நீர் மின்வலு, கனிப்பொருட்கள், மீன். **ஏற்றுமதிகள்** (2009): இறைச்சி, அரிசி, தோற்பொருட்கள், கம்பளி, மீன், மாட்டுப் பண்ணைப்பொருட்கள். **இறக்குமதிகள்** (2009): இயந்திரங்கள், மசகு எண்ணெய். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2009): ஐக்கிய அமெரிக்கா, பிரேசில், ஜேர்மனி, ஆர்ஜன்டீனா, மெக்ஸிகோ, பராகுவே, சீனா.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

✱ சென்டா தெரேஸா தேசிய பூங்கா ✱ டெர்மஸ் டெல் டேய்மன் வெந்நீர் ஊற்றுக்கள் ✱ பெட்ல் பார்க் ✱ பிரியா கோட்டை ✱ சுதந்திர சதுக்கம்.



மொன்டிவீடியோ துறைமுகம்



சென்டா தெரேஸா தேசிய பூங்கா



கர்ரஸ்கோ சர்வதேச விமானநிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைவில் உள்ளவை பற்றிய தகவல்களைத் தரும் 'ரேடார்'







ரேடார் (Radar) என்பது ரேடியோ ஸேர்ச்லைட் என்பதாகும். இதன்மூலம் தொலைவிலுள்ள பொருட்களைப் பற்றிய பல்வேறு தகவல்களை அறிய முடிகின்றது. இது நூற்றுக்கணக்கான கி.மீற்றர் தூரத்தில் உள்ள பொருட்களைத் தேடியறிய ரேடியோ அலைகளைப் பயன்படுத்துகின்றது. இருள் மற்றும் மூடுபனியிலும் செயற்படக்கூடியது. ஒலி ரேடியோ டிடெக்ஷன் என்ட் ரேஞ்ஜிங் என்பதன் முதன்மை திறங்களைக் கலந்து ரேடார் தயாரிக்கப்படுகின்றது.

## கண்டுபிடிப்பு

பிரித்தானியாவைத் தாக்க வரும் ஜேர்மனின் விமானங்களைக் கண்டறியவே இந்த ரேடார் கருவி கண்டுபிடிக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போருக்கான கருமேகங்கள் சூழ ஆரம்பித்த வேளையில் 1935 ஆம் ஆண்டு ரொபர்ட் வொட்சன் வோட் என்பவரால் ரேடார் கண்டுபிடிக்கப் பட்டது. 'ரேடியோ டிடெக்ஷன் என்ட் ரேஞ்ஜிங்' என்பதன் சுருக்கமே 'ரேடார்' என்பதாகும். ஆரம்பகட்டத்தில் போரின் போது மட்டுமே இது பயன்படுத்தப் பட்டது. காலகதியில் கப்பல் மற்றும் விமானங்களுக்கு வழிகாட்ட வான் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த,







பருவகால நிலையை அறிய, வாகனங்களின் வேகத்தை அறிய என இந்த ரேடார் சாதனம் பயன்படுத்தப்படுகின்றது.

## ரேடாரின் இயக்கம்

ரேடார் செட்டின் ஏரியலிலிருந்து சிறிய பாய்ச்சலாக (ரேடியோ) வானொலி அலைகள் அனுப்பப் படுகின்றன. இவை ஏதேனும் ஒரு பொருளோடு மோதும்போது மாற்றமடைந்து, திரும்பவும் ரேடார் செட்டுக்கே வருகின்றன. ரேடியோ ரிஸீவர் மாறிய அலைகள், வித்தியாசப்பட்ட அலைகளின் எதிரொலியைப் பிடித்துக்கொள்கின்றது. சிறப்புக் கருவிகளோ இதன்மூலம் கடக்கப்பட்ட தூரத்தைக் கணக்கிடுகின்றன. இதன் தொலைவையும் நேரத்தையும் ரேடியோ அலைகளின் வேகத்தையும் கொண்டு எளிதாக அறியக் கூடியதாக உள்ளது. ரேடியோ அலையின் வேகமானது, நிமிடத்திற்கு 300,000 கி.மீற்றர்களாகும்.

இதன்மூலம் பொருள் இருக்கும் திசையை அறிய முடிகின்றது. அனுப்பு ஏரியல் அல்லது அன்டெனா ரேடியோ அலைகளைக் கற்றையாக ஒரு சமயத்தில் ஒரே திசையில் அனுப்புகின்றது. ஏரியலை எதிரொலி கேட்கும்வரை திருப்பியவாறே இருக்கலாம். எத்திசையில் ஏரியல் சமிக்ஞை காட்டுகின்றதோ, அத்திசையில் தான் பொருள் இருப்பதை தெளிவாகக் கண்டறியலாம்.

## ரேடாரின் பயன்கள்

கப்பல்கள், ரேடார் கருவியின் உதவியால் பிறகப்பல்களையும் துறைமுக நுழைவாயில்களையும் பனிப்பாறை (Iceberg) போன்ற அபாயகரமான பொருட்கள் போன்றவற்றின் இருப்பிடத்தையும் அறியமுடிகின்றது. விமானங்களுக்கும் ரேடார் கருவி பேருதவி புரிகின்றது. விமானத்தளத்தில் ரேடார் கருவியின் உதவியால் விமானங்கள் ஒன்றுக்கொன்று மோதிக்கொள்ளாமல் தடுக்கப்படுகின்றது. வானிலை அறிவியலாளர்களும் அவதான நிலையத்தினரும் ரேடாரின் உதவியால் புயல் பற்றிய செய்தியை அறிகின்றனர். பொலிஸாரோ பெருந்தெருக்களில் வாகனங்களின் வேகத்தை அறிய ரேடார்களைப் பயன்படுத்துகின்றனர். இது விண்வெளித் துணைக்கோள் மற்றும் இதர விண்கலங்கள் பற்றிய தகவல்களையும் தருகின்றது.

## ஸோனார்

கடலில் பயணம் செய்யும் கப்பல் உள்ளிட்ட பல போக்குவரத்து சாதனங்கள் நீருக்கடியில் உள்ள பொருட்களை அறியவும், நீரின் ஆழத்தை அளக்கவும் ஸோனாரை உபயோகிக்கின்றன. 'ஸோனார்' என்பது 'சவுண்ட் நேவிகேஷன் அண்ட் ரேஞ்சிங்' என்பதன் சுருக்கமாகும்.

ஸோனார் ரேடார் போன்றே செயற்படுகின்றது. இதில் ரேடியோ அலைகளுக்குப் பதில் ஒலி அலைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒலியலைகள் நீருக்குள்ளே அனுப்பப்படுகின்றன. அவை ஏதேனுமொரு பொருளோடு மோதும்போது திருப்பி விடுகின்றன. பொருளை அடைந்ததிலிருந்து திரும்பும்போது வரையான நேரம் அளவிடப் படுகின்றது. இதன்மூலம் பொருள் இருக்கும் தூரத்தைக் கணக்கிடமுடிகின்றது.

ஜெய்கர்


சரளமாக ஆங்கிலத்தில் எழுத, பேச, வாசிக்க இப்பொழுது வீட்டிலிருந்தே கற்கலாம்.

ஆங்கிலத்தில் அழகாக பேச வேண்டும் என்பது அனைவரினதும் ஆசை. ஆனால் வீட்டை வீட்டு வெளியே சென்று கற்க நேரம் இல்லாத மாணவர்கள், இல்லத்தரசிகள், தொழில் புரிபவர்கள் தொழில் வாய்ப்பை எதிர்பார்த்து இருப்பவர்கள் இளைஞர்கள் யுவதிகள் அனைவருக்கும் வீட்டிலிருந்தே ஆங்கிலம் கற்க அறிமுகமாகிறது Nithya's English Home study Pack. ஆங்கில கற்கை பொதி

English Home Study Pack
ஒன்றில் அடங்குபவை.

ஆங்கில பேச்சு பயிற்சி புத்தகங்கள் 12
(ஆங்கில பேச்சு பயிற்சி, இலக்கணம், கவிதைகள் குறுக்கெழுத்து போட்டி, கடிதம் எழுதுதல், சிறுகதைகள், கட்டுரைகள் உள்ளடக்கிய புத்தகம்)

The Necklace Story Book
த நெக்லஸ் சிறுகதை புத்தகம்.

1-ஆங்கில பேச்சு பயிற்சி VIDEO CD

1 ஆங்கில வாசிப்பு பயிற்சி AUDIO CD

3 ஆங்கில பேச்சு பயிற்சி AUDIO CD

Audio Cd Guide Book
CD களை போட்டு கேட்கும் போது கையில் வைத்திருக்க வேண்டும்.

அழகிய Bag | விடை எழுதும் பத்திரங்கள்

ENGLISH TAMIL DICTIONARY.
ஆங்கில தமிழ் அகராதி.

13 பாடப் புத்தகங்களிலும் காணப்படும் பயிற்சிகளுக்கு விடைகளை எழுதி அனுப்ப வேண்டும் அவைகளை பிழை திருத்தி உங்களுக்கு மீண்டும் அனுப்பி வைக்கப்படும். இதன் மூலம் நீங்கள் பிழைகளை திருத்திக்கொள்ளலாம்.

பாடநெறி முடிவில்
DIPLOMA IN ENGLISH
சான்றிதழ் வழங்கப்படும்.

UK ,Usa போன்ற நாடுகளில்
உயர் கல்விக்காக
செல்ல இருக்கும் மாணவர்களுக்கு மட்டும் சான்றிதழுடன் விசேட நற்சான்று பத்திரம் ஒன்று இலவசமாக வழங்கப்படும்.

Direct Delivery
கொழும்பு கம்பஹா கண்டி மாவட்டங்களுக்கு Study Pack வீட்டுக்கே முகவர் மூலம் அனுப்பப்படும்.



Home Study Pack
ஒன்றை பெறுவது எப்படி ?

நீங்கள் Study Pack ஐ பெற விரும்பின் பின்வருமாறு SMS செய்யுங்கள்.
VJ - உங்கள் பெயர் முகவரி வயது
0777-806 606 SMS செய்யுங்கள்.
Study pack அருகே இருக்கும் தபால் கந்தோருக்கு அனுப்பி வைக்கப்படும் பின்னர் ரூ 1450/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். அல்லது
அருகே இருக்கும் பின்வரும் வங்கி ஒன்றில்
Bank Of Ceylon - 9956240
Commercial - 80-400-52 644
M.H.M.Ramzan Director Jei என்ற பெயரில் ரூ 1250/- செலுத்தி விட்டு உங்கள் விபரங்களை கவிதா - 0814-92 91 93 இலக்கத்திற்கு அறிவிக்கவும்.
Study Pack வீட்டுக்கே அனுப்பி வைக்கப்படும். தபால் நிலையத்திற்கு செல்ல தேவை இல்லை.

JEFFWOOLAR EDUCATIONAL INSTITUTE
P.O.BOX.119 KANDY. 0814-929193


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வினாத்தாள் - II (கடந்த வாரத் தொடர்ச்சி)

பெயர்: .................................... நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்


30) மலேரியாக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்பு வகை எது?

1. கியுலெக்ஸ்
2. ஈடிஸ் இன பெண் நுளம்பு
3. அனோபிலிஸ் பெண்நுளம்பு
4. அனோபிலிஸ் ஆண் நுளம்பு

31) மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளில் முதலில் செய்யவேண்டியது எது?

1. மனதைத் தளர்த்துதல்
2. பிரார்த்தனை
3. உடலைத் தளர்த்துதல்
4. மனவுறுதி


32) A, B, C,D ஆகிய பாத்திரங்களில் ஒரே அளவான கறிஉப்பை இடும்போது, எந்தப் பாத்திரத்திலுள்ள கறிஉப்பு விரைவாகக் கரையும்?




33) தேசப்படங்களில் பாலத்தைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நியம நிறம் எது?

1. சிவப்பு 2. நீலம் 3. கறுப்பு 4. கபிலம்

34) அமாவாசையிலிருந்து ஒரு வாரத்தின் பின்னர் வானில் காணப்படும் சந்திரனின் வடிவம்;




35) புதிதாக வெளியிடப்பட்ட நூறு ரூபாய் தாள்காசில் காணப்படும் நீர்வீழ்ச்சி எது?

1. தியலும நீர்வீழ்ச்சி
2. லக்ஸபான நீர்வீழ்ச்சி
3. பம்பரகந்த நீர்வீழ்ச்சி
4. துன்கிந்த நீர்வீழ்ச்சி

36) பண்டுகாபன் மன்னன் கட்டுவித்த குளம் எது?

1. மின்னேரியாக் குளம்
2. அபய வாவி
3. கலா வாவி
4. கந்தளாய் குளம்

37)  இக்குறியீடு வெளிப்படுத்துவது எதனை?

1. கவனமாகக் கையாளுங்கள்
2. தீ பற்ற வைப்பது ஆபத்தானது
3. மின் தாக்குதல் ஏற்பட இடமுண்டு
4. நொருங்கக்கூடியது

38) 'களனி கங்கை' கடலுடன் கலக்கும் இடம் எது?

1. திருகோணமலை
2. களுத்துறை
3. கொழும்பு
4. அம்பாந்தோட்டை


39) பாடசாலை விளையாட்டுப் போட்டியின்போது முதலில் நிகழ்வது எது?

1. பாடசாலைக் கொடியேற்றுதல்
2. தமிழ் மொழி வாழ்த்துப் பாடுதல்
3. தேசிய கீதம் இசைத்தல்
4. தேசிய கொடி ஏற்றுதல்

40)  இக்குறியீட்டின்மூலம் விளங்குவது எது?

1. சரணாலயம்
2. தொடர்பாடல்
3. பாதுகாப்பு
4. சமாதானம்

41) இரு உலர் மின்கலங்கள் (C), ஒரு மின்குமிழ் (B), ஓர் ஆளி (S) ஆகியன வயர்த்துண்டுகளின்மூலம் பின்வரும் ஒவ்வொரு விதமாகத் தொடுக்கப்பட்டுள்ளன. ஆளி S ஐ மூடும்போது, மின்குமிழ் ஒளிரும் உரு யாது?




42) காட்டப்பட்டுள்ள இலக்க அட்டைகள் நான்கையும் பயன்படுத்திப் பெறக்கூடிய

| | |
|---|---|
| 2 | 3 |
| 0 | 7 |

(i) மிகப் பெரிய நான்கிலக்க எண் யாது?....................................................
(ii) மிகச் சிறிய நான்கிலக்க எண் யாது?....................................................


43) (i) 7603 இல் நூறினிடத்து இலக்கத்தின் பெறுமானம் யாது?........................................
(ii) 8764 இல் இலக்கம் 6 குறிக்கும் இடப்பெறுமானம் யாது? ........................................

44) 30147 ஐ எண் பெயரில் எழுதுக. ........................................................................

45) பூக்கன்று நாற்றுமேடையொன்றில் 4,378 அந்தூரியக் கன்றுகளும் 536 ஓக்கிட் கன்றுகளும் உள்ளன. நாற்றுமேடையில் உள்ள பூக்கன்றுகளின் மொத்த எண்ணிக்கை யாது? ........................................................

46) (i) ஒருவருக்கு 6 பென்சில்கள் வீதம் 634 பென்சில்களை எத்தனை பேருக்கு கொடுக்கலாம்? ....................................................
(ii) அவ்வாறு கொடுத்த பின்னர் எத்தனை பென்சில்கள் எஞ்சியிருக்கும்? ......................

47) ஒரு கட்டத்தின் திட்டப்படம் பின்வருமாறு உருவில் காட்டப்படுகிறது.




இங்கு காட்டப்பட்டுள்ள அளவிடைக்கு ஏற்ப அறை B யின் நீளம் யாது? ..........

48) ரூபாய் 35.00 விலையுள்ள ஒரு அடிமட்டத்தையும் ரூபாய் 17.50 விலையுள்ள ஒரு பேனையையும் வாங்கி, ரூபாய் 100.00 ஐ கடைக்காரருக்குக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

ரூபாய்...................... சதம்.......................

49) 

இவ்வுருவில் காணப்படுவது ஒரு சிக்னல் (Signal) பெட்டி ஆகும்.

(i) இவ்வுருவின் விளிம்புகளின் எண்ணிக்கை யாது? ..........................
(ii) செவ்வக முகங்களின் எண்ணிக்கை யாது? ..........................

50) பயணத்தை ஆரம்பிக்கும்போது, ஒரு வாகனத்தின் மானியில் இலக்கங்கள் பின்வருமாறு பதியப்பட்டிருந்தன.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 0 | 3 | 3 | 9 | 9 | 0 |

வாகனம் மேலும் பத்துக் கிலோமீற்றர் சென்ற பின்னர், மானியில் பதிவாகும் இலக்கங்களை வெற்றுக்கூடுகளினுள்ளே எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

51) ஒரு கிலோகிராம் பருப்பின் விலை ரூபாய் 120.00 ஆகும். 2kg 250g பருப்பின் விலை எவ்வளவு?

ரூபாய்.......................

52) 


(i) இவ்வுருவில் உள்ள செங்கோண முக்கோணிகள் எத்தனை?
..................................
(ii) இவ்வுருவில் உள்ள செங்கோணங்கள் எத்தனை?
..................................

53) 6kg தேயிலையிலிருந்து 3kg 750g தேயிலை பயன்படுத்தப்பட்டது. எஞ்சியிருக்கும் தேயிலையின் நிறை யாது? ....................................................

54) புதிதாக வெளியிடப்பட்ட தாள்காசில்

(i) லங்காதிலக விகாரை காணப்படும் தாள்காசு எது? ..........................
(ii) மன்னம்பிட்டிய பாலம் காணப்படும் தாள்காசு எது? ..........................

55) கொழும்பு இந்துக் கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவர்கள் உட்கொண்ட உணவு பற்றிய தகவல்கள் வரைபில் காணப்படுகின்றன.




(i) எத்தனை மாணவர்கள் பயறைவிட அதிகமாகப் பாணை விரும்புகின்றனர்?
..........................................
(ii) இடியப்பத்தை 35 மாணவர்கள் விரும்புகின்றனர். இதனை நிழல் வரைபில் குறித்து நிழற்றுக.

56) ✱ கண்ணன் வீட்டிலிருந்து தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தபோது, 'திடீரென இடி-மின்னலுடன் பெரும் மழை பெய்கிறது'........ நீர்தான் கண்ணன் எனின், இச்சந்தர்ப்பத்தில் நீர் செய்யவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கை பற்றி ஆறு வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது ஐந்து சொற்களாவது இடம்பெறுதல் வேண்டும். அந்த வாக்கியங்களில் எழுவாய், பயனிலை தொடர்பு திருத்தமாக இருத்தல் வேண்டும்)

(i) ..........................................................................
(ii) ..........................................................................
(iii) ..........................................................................
(iv) ..........................................................................
(v) ..........................................................................
(vi) ..........................................................................


(விடைகள் 22 ஆம் பக்கத்தில்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வி
## முகாமைத்துவம் - 79
### கற்றலுக்கான ஆலோசனைகள்

## மாணவர்களின் கல்வியில் செல்வாக்குச் செலுத்தும்
# ஆசிரியர்-மாணவர் தொடர்பு



*கற்பித்தல் மற்றும் கற்றல் ஆகியவை சிறப்பாக அமைவதில் ஆசிரியர்-மாணவர்களுக்கிடையிலான தொடர்பு மிகவும் செல்வாக்குச் செலுத்துகின்றது. ஆசிரியர் பணியில் ஈடுபடுபவர் கற்பித்தலோடு மாத்திரம் நின்றுவிடாது, அதனோடு சார்ந்ததாக, மாணவர்களோடு சிறந்த தொடர்பைப் பேண வேண்டும்.*

குறிப்பிட்ட வகுப்பறையொன்றில் தமக்கென்று ஒதுக்கப்படும் நேரத்தை முழுமையாகக் கற்பித்தலுக்கு மாத்திரம் பயன்படுத்தாமல், அந்த நேரத்தில் கற்பித்தலோடு, மாணவர்களுக்கு அறிவுரை கூறுதல், உலக விடயங்கள் பற்றிய அறிவை ஊட்டுதல் போன்ற பாடவிதானத்துடன் தொடர்புடைய பல்வேறு விடயங்களையும் பேச வேண்டும்.

சிலவேளைகளில் மாணவர்கள் தவறு செய்தல் தவிர்க்க முடியாத நிலையாகவே காணப்படுகின்றது. அத்தகைய வேளைகளில் தவறு செய்த மாணவரை ஏனைய மாணவர்களுக்கு முன்னிலையில் வைத்து தண்டிக்கவோ, ஏசவோ அல்லது அவமானப்படுத்தவோ கூடாது. மாறாக, குறிப்பிட்ட அந்த மாணவரைத் தனியாக அழைத்து- அவர் செய்த தவறு பற்றி எடுத்துக்கூறி- அறிவுரை வழங்க வேண்டும். இதுவே ஆரோக்கியமான மிகச் சிறந்த வழிமுறையாகும். இதனால், மாணவருக்கும் ஆசிரியருக்கும் இடையில் சிறந்த புரிந்துணர்வு ஏற்படும்.

அத்துடன், வகுப்பறை ஒன்றில் எல்லா மாணவர்களும் ஒரே அறிவு மட்டத்தில் இருப்பதில்லை. ஒருவர் அறிந்த விடயம்



தொடர்பில் இன்னொருவர் அறியாத சூழ்நிலையும் காணப்படும். இத்தகைய நிலையில், ஓர் ஆசிரியர் ஒரு மாணவரை இன்னொரு மாணவரோடு ஒப்பிட்டுக் குறை கூறிப் பேசுவது கூடாது. ஏனெனில், இவ்வாறு குறை கூறுவதால், குறிப்பிட்ட மாணவர் உளரீதியான பாதிப்பை எதிர்நோக்கக்கூடும். ஆசிரியர்கள் எப்போதும் மாணவர்களின் தேவைகளுக்கு ஏற்ப, ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்க வேண்டும். இதன் அடிப்படையில்தான் ஒரு மாணவரது கல்வி நிலையும் ஒழுக்கமும் வளர்ச்சியை நோக்கிச் செல்லும்.


ஆசிரியரானவர் சகல மாணவர்களையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். மாணவர்களுக்கிடையில் பாரபட்சம் காட்டினால், மாணவர்கள் தங்களுக்கிடையே தாழ்வு மனப்பான்மையை உருவாக்கிக்கொள்வர். இது அந்த மாணவர்களுக்கு மிகப் பெரிய பாதிப்பாகவே அமையும்.

குறைவான புள்ளிகளை எடுக்கும் மாணவர்கள் காணப்படின், ஒரே மாதிரியான வகுப்பறைக் கற்பித்தலை மேற்கொள்ளாமல், அறிவு மட்டத்தில் பின்தங்கியிருக்கும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு மேலதிக வகுப்புக்களை நடத்தலாம்.

மாணவர்களின் திறமைகள் மற்றும் நல்ல விடயங்களுக்காக, அவர்கள் பாராட்டப்படல் வேண்டும். மேலும் முன்னேறுவதற்கு அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும். மேற்கூறிய விடயங்களுக்கமைய, கல்வியில் துரித வளர்ச்சியைக் காணக்கூடிய வகையிலான ஒழுக்கமான மாணவ சமுதாயத்தைக் கட்டி எழுப்புவது ஒவ்வோர் ஆசிரியரதும் மிக முக்கிய கடமையும் பொறுப்புமாகும்.

(தொடரும்)

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**



# 2011, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



உடத்தலவின்னை மடிகே ஜாமியுள் அஸ்ஹர் மத்திய கல்லூரி மாணவனான எம். ராஷித், 178 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ரியாழ்டீன்-நயீமா தம்பதியரின் புதல்வராவார்.



இரா. கலைப்பருதி, 180 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய மாணவியாவார்.



ம.இளவரசு, 162 புள்ளிகளைப் பெற்றுள்ளார். மட்/செங்கலடி மத்திய கல்லூரி மாணவனான இவர், மணிவண்ணன்-நித்தியகலா தம்பதியரின் புதல்வராவார்.



ஞா.சுயானி, 171 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய மாணவியாவார்.



நாபாவளை முஸ்லிம் ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எம்.நஸ்ருல்லா, 161 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நௌபல்-நஸீரா தம்பதியரின் புதல்வராவார்.



யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய மாணவன் த.சமரழகன், 170 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



நாபாவளை முஸ்லிம் ம.வித்தியாலய மாணவனான எம்.நஸ்ரான், 154 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நயீம்-ரமீலா தம்பதியரின் புதல்வராவார்.



அட்டுளுகமை அல்-கஸ்ஸாலி மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் எம்.உமைர், 163 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சித்தீக்- ரிஸானா தம்பதியரின் புதல்வராவார்.



க.கஜமுகவர்ஷன், 171 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சது/முஸ்லிம் மத்.ம.வித்தியாலய மாணவராவார்.



வறக்காப்பொளை பாபுல் ஹஸன் மத்திய கல்லூரி மாணவன் எம்.நப்லான், 182 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், இக்பால்-ரினோஸா தம்பதியரின் புதல்வராவார்.



எஃப்.மலீஹா, 181 புள்ளிகளைப் பெற்றுள்ளார். குருந்துகொல்ல மத்திய கல்லூரி மாணவியான இவர், மலிக்-நஸ்லியா தம்பதியரின் புதல்வியாவார்.



ஹுமைதா பாயிஸ், 180 புள்ளிகளைப் பெற்றுள்ளார். கஹட்டோவிட்ட முஸ்லிம் மகளிர் வித்தியாலய மாணவியான இவர், பாயிஸ்-ஷாமிலா தம்பதியரின் புதல்வியாவார்.



யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய மாணவன் ஜெ. அகிலன், 181 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



கஹட்டோவிட்ட முஸ்லிம் மகளிர் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் முப்லா முஸம்மில், 180 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர்,முஸம்மில்-சித்தி ஜுமைரா தம்பதியரின் புதல்வியாவார்.



நிக/வெல்பொத்துவெவ மு.ம.வித்தியாலயத்தில் சித்தியடைந்த மாணவர்களான (இ.வ) எஃப்.நிப்ளா (157 புள்ளிகள்), எஃப்.ஹப்ளா (177 புள்ளிகள்), இஸ்ஸத் பர்வின் (154 புள்ளிகள்), எம்.இன்ஷாத் (165 புள்ளிகள்), எஸ்.ஸப்னி (176 புள்ளிகள்) ஆகியோர் தமது ஆரம்பப்பிரிவுத் தலைவர் எம்.ஹனீபா, பாடசாலை அதிபர் எஸ்.முஸ்தபா, வகுப்பாசிரியை எஃப்.நுஸ்ரியா ஆகியோருடன் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாடசாலை விடுமுறையைக் கழிப்பதற்காக வாசு தனது மாமாவின் வீட்டிற்கு வந்திருந்தான். மறுநாள் அதிகாலையிலேயே விழித்தெழுந்து,காலைக் கடன்களை முடித்து வீட்டிற்குள் நுழைந்ததும் அவனது மாமி பசும் பால் நிரம்பிய குவளை ஒன்றை வாசுவிடம் நீட்டினார். அதனை சுவைத்தவாறே, வீட்டின் பின்புறமாக சென்றான் வாசு. அங்கே அவனது மாமா வீட்டுத்தோட்டத்தில் கட்டப்பட்டிருந்த பசுவிலிருந்து பால் கறந்துகொண்டிருந்தார். அதுவரை கறந்திருந்த பாலில் ஒரு பகுதியை ஒரு பாத்திரத்தில் எடுத்து மாமியிடம் கொடுத்தார்.

அதைக் கவனித்த வாசு, ''ஏன் மாமா பாலில் ஒரு பகுதியை பாத்திரத்தில் எடுத்து மாமிக்கு கொடுத்தீர்கள்'' என்று கேட்டான். அதற்கு மாமா, ''அதுவா? அந்தப் பாலை உறைய வைத்து தயிர் செய்வதற்கு'' என்றார். மாமாவின் பதில் வாசுவிற்கு வியப்பை அளித்தது. ''என்னது? பாலில் இருந்து தயிர் செய்யலாமா?'' என்றான் வாசு. ''தயிர் மட்டுமில்லை வாசு; பாலிலிருந்து மோர், யோகட், பால்மா, பாலாடைக்கட்டி என ஏராளமான பாலுணவுகளைத் தயாரிக்கலாம். கொஞ்சம் பொறு. நான் இந்த வேலையை முடித்துவிட்டு வந்து அது பற்றிக் கூறுகிறேன்'' என்று கூறிய மாமா, பால் உற்பத்தி பற்றி வாசுவிற்கு விளக்கத் தொடங்கினார்.

# பால் உற்பத்தி பற்றி அறிந்துகொள்வோம்!







## பால் பயன்பாட்டின் ஆரம்பம்

பாலின் சுவையறிய நாம் சிறு வயதிலிருந்தே பழக்கப்பட்டுவிட்டோம். அதுதான் தாய்ப்பால். அதற்கு அடுத்தபடியாக, பசும்பாலுக்கே நாம் முக்கியத்துவம் அளிக்கின்றோம். ஆதிகாலத்திலிருந்தே மனிதர்கள் பாலை அருந்தவும் அதிலிருந்து பல்வேறு உணவுப் பொருட்களைத் தயாரித்து உணவாகக்கொள்ளவும் பழக்கப்பட்டு விட்டனர். பண்டைய வரலாறுகளினூடாக, இது புலனாகின்றது. ஆரம்ப காலத்தில் இறைச்சிக்காக மட்டுமே ஆடுகள், மாடுகள், எருதுகள் வளர்க்கப்பட்டு வந்தன. பின்னர் அவற்றிலிருந்து பால் கறக்கப்பட்டு மக்கள் அருந்திவந்துள்ளனர். நாளடைவில், அந்தப் பாலிலிருந்து பல்வேறு உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யவும் அவர்கள் கற்றுக்கொண்டனர். தற்காலத்தில் பாலுற்பத்தியில் நவீன தொழில்நுட்ப முறைகள் பின்பற்றப்பட்டு பல்வேறு உணவுப் பண்டங்களும் தயாரிக்கப்படுகின்றதோடு, பால் கெடாமல் நீண்டநாள் வைத்திருப்பதற்கு ஏற்ற முறைகளும் உள்ளன.

## பால் உற்பத்திப் பொருட்கள்

பாலுணவுப் பொருட்களைத் தயாரிப்பதற்கு பெரும்பாலும் பசும்பாலே பயன்படுத்தப்படுகின்றது. அதன்படி; பால்மா, வெண்ணெய், பாலாடைக் கட்டி, யோகட், ஐஸ்கிறீம் போன்ற பல்வேறு உணவுப் பொருட்கள் பாலில் இருந்து தயாரிக்கப்படுகின்றன.

## பாலில் அடங்கியுள்ள சத்துக்கள்

மனிதனுக்கு மிகவும் ஆரோக்கியமான போஷாக்கு மிக்க பால் தாய்ப்பாலாகும். இரண்டாவதாக பசும்பாலாகும். எனவே, இவ்விரண்டிலும் அடங்கியுள்ள போஷாக்கு மட்டங்களைப் பற்றி நோக்குவோம்.

| | தாய்ப்பால் | பசும்பால் |
|---|---|---|
| நீர் | 87.5% | 87.5% |
| புரதம் | 1.2% | 3.3% |
| லெக்டோஸ் | 6.9% | 4.6% |
| கொழுப்பு | 3.8% | 3.7% |
| கல்சியம் | 0.1% | 0.1% |

பசும்பாலைப் பொறுத்தவரையில்; பசுவின் இனம், அதன் ரகம், சுரக்கும் தன்மை, கறக்கப்படும் நேரம் ஆகியவற்றின் அடிப்படையில் போஷாக்கு மட்டத்தில் மாற்றங்கள் ஏற்படலாம்.

## பால் உற்பத்திக்குப் பெயர் பெற்ற இடங்கள்

* **பசும்பால்:** மலையக ஈரவலயங்கள் உட்பட, மத்திய மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் பசும்பால் உற்பத்திக்காக பசுமாடுகள் வளர்க்கப்படுகின்றன.
* **எருமைப்பால்:** ரிதியகம, மெல்சிரிபுர, நிகவெரட்டிய, வெலிசர, ஹாரகம ஆகிய பிரதேசங்களில் எருமை மாடுகள் வளர்க்கப்படுவதோடு, பால் உற்பத்தியும் மேற்கொள்ளப்படுகின்றது.
* **ஆட்டுப்பால்:** யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உள்ளிட்ட வடக்கு-கிழக்குப் பிரதேசங்கள் ஆட்டுப் பால் உற்பத்திக்குப் பெயர் பெற்ற இடங்களாகும்.

## ஐவகை சுவைகள்

பண்டையகால கிராமிய மக்கள் ஐவகை சுவைகளடங்கிய பால் உற்பத்திப் பொருட்களை அன்றா[illegible] உணவு வேளையில் சேர்த்துக்கொள்ளத் தவறவில்லை. அவையாவன:

* **பால்:** திரவ ஆகாரமாகக் கொள்ளப்பட்டது.
* **மோர்:** கொழுப்பு நீக்கப்பட்ட பால்.
* **கடைந்த பால்:** பால் சூடாக்கப்பட்டு கடையப்பட்ட பால்.
* **நெய்:** பாலிலுள்ள கொழுப்பு சூடாக்கப்பட்டு தயாரிக்கப்படும்.
* **பசுவெண்ணெய்:** இது மருந்தாகப் பயன்படும்.

## இரு வழிகளில் பேணப்படல்

பசுவிலிருந்து கறக்கப்படும் பாலில் நுண்ணங்கிகள் இலகுவில் கலந்துவிடுகின்றன. எனவே, அந்தப் பாலை அருந்துவதற்கு முன்னர் அதிலிருக்கும் கிருமிகள் அழிக்கப்பட வேண்டும். அன்றேல், அது நமது உடலுக்குக் கேடு விளைவித்துவிடும். சூழல் தாக்கத்தினால் பால் கெடாமல் பேணப்படுவதற்கு பிரதானமாக இரண்டு வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

1. பாஸ்ச்சர் வகைப்பால்
2. நுண்ணுயிர் வடிகட்டப்பட்ட பால்

* **பாஸ்ச்சர் வகைப்பால்:** பாஸ்ச்சர் வகைப்பால் சூடாக்கித் தயாரிக்கப்படுவதால், உடலுக்குக் கேடு விளைவிக்கக்கூடிய கிருமிகள் இதன்போது அழிந்துவிடுகின்றன. பிரான்ஸின் உயிரியல் துறை விஞ்ஞானியான லூயி பாஸ்ச்சரே இந்த முறையைக் கண்டுபிடித்தார்.
* **நுண்ணுயிர் வடிகட்டப்பட்ட பால்:** உடலுக்குக் கேடு விளைவிக்கின்ற கிருமிகள் மற்றும் உடலுக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலுணவுகளில் போஷாக்கு

பால், போஷாக்கு நிறைந்த ஓர் உணவாகும். உடல் வளர்ச்சிக்கும் உடலின் ஆரோக்கியத்திற்கும் அவசியமான போஷாக்குப் பதார்த்தங்கள் அதில் நிறைந்துள்ளன. இது எளிதாக ஜீரணிக்கும் தன்மை கொண்டதோடு, அதன் திரவத்தன்மை ஜீரணமாவதை இலகுபடுத்தியும் விடும். பாலில் எமது உடலுக்குத் தேவையான போஷாக்குப் பதார்த்தங்கள் அடங்கி இருப்பதால், அது நிறையுணவுக்குச் சமமானது எனவும் கூறப்படுகின்றது.

# இயற்கையின் கொடை

பால், இயற்கை நமக்களித்த ஓர் உன்னத உணவாகும். பாலூட்டி உயிரினங்கள் யாவும் அவற்றின் குட்டிகளை பாலூட்டியே வளர்க்கின்றன. மனிதர்களும் பாலூட்டி வகையைச் சேர்ந்த ஓர் உயிரினமே. எனினும், மனிதர்கள் தமது தேவைகளுக்கமைய பசும்பால், எருமைப்பால், ஆட்டுப்பால் ஆகியவற்றையும் அருந்துகின்றனர். அத்தோடு, அந்தப் பாலிலிருந்து விதவிதமான உணவுப் பொருட்களையும் தயாரித்துக்கொள்கின்றனர்.



கேடு விளைவிக்காத கிருமிகள் என இரண்டு வகைகளும் அழிக்கப்பட்டிருக்கும்...ல் இந்த வகையைச் சேர்ந்ததாகும். ...த வழிமுறைக்கமைய, சில செக்கன்களுக்குள் 120°c அளவு வெப்பநிலையில் பால் சூடாக்கப்படுகின்றது.


## யோகட் (Yogurt)

ஈற்றுணவாக (dessert) உண்ணப்படும் போஷாக்குமிக்க ஓர் உணவாகும். மிச்சிகோ எனும் விஞ்ஞானியின் ஆராய்ச்சி ஒன்றின்போது விசேட நுண்ணுயிர் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அவர் அந்த நுண்ணுயிரினத்திற்கு 'லெக்டோஸ் பெசிலஸ்' எனப் பெயரிட்டார். அந்த நுண்ணுயிரி, பாலில் அடங்கியுள்ள லெக்டோஸை, லெக்டிக் அமிலமாக மாற்றியது. லெக்டிக் அமிலம் புளிப்புச் சுவையுடையது. யோகட் தயாரிப்பின் போது உறையவைக்கப்பட்ட நிலையிலேயே லெக்டோஸ் பயன்படுத்தப்படுகின்றது. உணவு சமிபாட்டுத் தொகுதியிலுள்ள உடலுக்குக் கேடு விளைவிக்கக்கூடிய பதார்த்தங்களை அழிக்கும் சக்தி யோகட்டிற்கு உள்ளது.

## பாலாடைக்கட்டி (Cheese)

இதற்கு நீண்ட வரலாறு உண்டு. கி.மு.4000 ஆண்டுகளுக்கு முன்பே பாலாடைக்கட்டி தயாரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. பாலிலுள்ள நீர்த்தன்மை அகற்றப்பட்டே பாலாடைக்கட்டி தயாரிக்கப்படுகின்றது. புரதமும் கொழுப்பும் அதில் கலந்திருப்பதால், அது உடல் வளர்ச்சிக்கு முக்கியமானதாகும்.இதில், இயற்கையான பாலாடைக்கட்டி பதப்படுத்தப்பட்ட பாலாடைக்கட்டி என இரு வகைகள் உள்ளன. இயற்கையான பாலாடைக்கட்டியை நீண்டகாலம் வைத்திருக்க முடியாது. பதப்படுத்தப்பட்ட பாலாடைக்கட்டியானது பால் சூடாக்கப்பட்டுக் கிருமிகள் அழிக்கப்பட்ட நிலையில் தயாரிக்கப்பட்டதாகும். இது





நீண்டகாலம் வைத்திருக்கலாம். பாலாடைக்கட்டியில் அதிக ஊட்டச்சத்துக்கள் இருக்கின்றன.

## வெண்ணெய் (Butter)

இது நீண்ட வரலாற்றைக்கொண்ட ஓர் உணவுப் பதார்த்தமாகும். பாலிலுள்ள கொழுப்பை நீக்கியே வெண்ணெய் தயாரிக்கப்படுகின்றது. மோர், நீர் மற்றும் உப்பு ஆகியவற்றைக் கலந்தே வெண்ணெய் தயாரிக்கப்படுகின்றது. இது மருத்துவக் குணம் கொண்டது. அதிகளவு ஊட்டச்சத்துக்கள் இதில் அடங்கியிருப்பதால் கண் பார்வைத் திறனை அதிகரிக்கும். தோலுக்கும் நிறத்தைக் கொடுக்கும். வெண்ணெய்யில் அடங்கியுள்ள விட்டமின் Aயின் அளவானது, பசுக்கள் உணவாகக்கொள்கின்ற புற்களில் அடங்கியுள்ள சத்துக்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும்.

இலங்கை போன்ற நாடுகளில் வருடம் பூராகவும் சூரியஒளியும் மழை வீழ்ச்சியும் நன்றாகக் கிடைப்பதால்,இங்குள்ள பசுக்களின் பாலில் விட்டமின் A நிறைந்திருக்கின்றது.

## ஐஸ்கிறீம் (Ice cream)

அனேகமானோரால் ஈற்றுணவாக விரும்பி உண்ணப்படும் ஓர் உணவுப் பதார்த்தமாகும். ஐஸ்கிறீம் தயாரிப்பில் மிருக எண்ணெய் மற்றும் தாவர எண்ணெய் என்பன பயன்படுத்தப்படுகின்றன. எனினும், அவை மிருதுவான தன்மையை வழங்குவது குறைவு என்ற காரணத்தால், இதன் உற்பத்திக்காகப் பசும்பாலும் பயன்படுத்தப் படுகின்றது.பாலில் அடங்கியுள்ள கொழுப்பில் சீனி மற்றும் பல்வேறு ரசாயன சுவையூட்டிகளும் சேர்க்கப்பட்டு மேலும் சுவையூட்டப்படும். போஷாக்கு மிக்க ஐஸ்கிறீமை திண்ம நிலையில் வைத்திருக்க வேண்டுமாயின், 7°c அளவு வெப்பநிலையில் அது வைக்கப்படல் வேண்டும்.

## பால்மா (Milk powder)

ஏராளமான நாடுகளில் பேக்கரி உணவுத் தயாரிப்புகளுக்காகவே பால்மா பயன்படுத்தப்படுகின்றது.

எனினும், இலங்கை போன்ற நாடுகளில் பானம் தயாரிப்பதற்கே பால்மா பயன்படுத்தப்படுகின்றது. பாலை அதிக வெப்பமேற்றுவதன்மூலம் பால்மா தயாரிக்கப்படுகின்றது. நீண்டகாலப் பயன்பாட்டுக்கேற்ற ஓர் உணவுப் பண்டமாகவே பால்மா காணப்படுகின்றது. பால்மா விரைவில் கரைவதற்கு லெசதீன் எனும் பதார்த்தம் அதில் கலக்கப்படுகின்றது.

**ஏ.ஜே.எம்.நிழாம்**









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுள்ள நாய்





செல்வந்தர் ஒருவர் நாய் ஒன்றை பாசத்துடன் வளர்த்து வந்தார். சிலகாலத்தின் பின்னர் அச்செல்வந்தர் பரம ஏழை யாகிவிட்டார். அவருக்கு தனது நாய்க்குக்கூட உணவு அளிக்க முடியவில்லை. அந்தளவு அவர் ஏழையாகிப் போனார். பட்டினியால் அவரது நாயின் உடல் மெலிந்து வருந்திக் கொண்டிருந்ததைக் கண்ட செல்வந்தர் மிகவும் கவலை கொண்டார். அதனால், அந்நாயைக் கொன்றுவிடத் தீர்மானித்தார்.

முட்டாள்தனமான தீர்மானத்தை எடுத்த அம்மனிதர் நாயை ஆற்றங்கரைக்கு அழைத்துச் சென்றார். பின்னர் ஆற்றுக்குக் குறுக்காகப் போடப்பட்ட பாலத்தின்மீது ஏற்றி நாயின் கழுத்தில் கல்லைக் கட்டி ஆற்றில் தள்ளிவிட்டார்.

அதேவேளை கால் வழுக்கி அவரும் ஆற்றில் விழுந்தார். நீச்சல் தெரியாமல் தத்தளித்த அவர். பிறர் உதவி கேட்டுக் கூச்சலிட்டார். எனினும்,ஒருவரும் உதவி செய்ய முன்வரவில்லை. இதேவேளை, குளத்தில் அவரால் தள்ளப்பட்ட நாயின் கழுத்தி விருந்த கயிறு அறுந்துவிழுந்து விட்டது. தமது எஜமான் நீரில் தத்தளிப்ப தைக்கண்ட நாய் அவரது சட்டை யைப் பிடித்து இழுத்துக் கரை சேர்த் தது. அப்போது தான் நாய் தன்மீது வைத்திருந்த பாசத்தை யும் நன்றியுணர் வையும் அவர் உணர்ந்தார். தான் உண்ணாவிட்டாலும் பரவா யில்லை தனது நாய்க்கு எப்படியாவது உணவளிக்க வேண்டுமென்றெண்ணி கிடைத்த தொழிலை ஆர்வத்துடன் செய்து நாயைக் காப்பாற்றி தாமும் வாழ்வில் உயர்வடைந் தார்.

பாத்திமா கதீஜா,
கனேதன்னை மதீனா
மு.ம.வித்., ஹிங்குளை,




## புகழ் பூத்தோரின் சிறப்புப் பெயர்கள்

| பிரபலமானோர் | சிறப்புப் பெயர்கள் |
|---|---|
| சரோஜினி நாயுடு | - கவிக்குயில் |
| மௌனி | - சிறுகதையின் திருமூலர் |
| எட்மண்ட் ஸ்பென்ஸர் | - கவிஞர்களின் கவிஞன் |
| விபுலானந்த அடிகள் | - முத்தமிழ் வித்தகர் |
| பாரதிதாசன் | - பாவேந்தர் |
| மு.நல்லதம்பிப் புலவர் | - முதுதமிழ்ப் புலவர் |
| சோமசுந்தரப் புலவர் | - சிறுவர்களின் தங்கத்தாத்தா |
| கலையரசு சொர்ணலிங்கம் | - இலங்கைத் தமிழ் நாடகத்தந்தை |
| கல்லடி சு.வேலுப்பிள்ளை | - ஆசுகவி |
| ம.பொ.சிவஞானம் | - சிலம்புச் செல்வர் |
| வி.க.கல்யாணசுந்தரம் | - சாது முனிவர் |
| பம்பல் சம்பந்த முதலியார் | - தமிழ் நாடகத்தந்தை |
| வ.வே.சு.ஐயர் | - தமிழ் சிறுகதை முன்னோடி |
| ஏ.பெரியதம்பிப்பிள்ளை | - புலவர்மணி |
| கி.ஆ.பெ.விசுவநாதம் | - முத்தமிழ்க் காவலர் |
| ஆ.மு.ஷரிபுத்தீன் | - புலவர் புலவர்மணி |







அய்மா நிஃமத்துல்லா, அல்-ஹம்றா வித், மருதமுனை.

## எறும்புகள்



- உலகில் மனிதன் தோன்றுவதற்கு 50 கோடி ஆண்டுகளுக்கு முன்பே எறும்புகள் தோன்றிவிட்டன.
- எறும்புகளில் 5,037 இனங்கள் உள்ளன.
- ஒரு புற்றில் ஒரு ராணி எறும்புதான் இருக்கும்.
- எறும்பு தன் எடையைப்போன்று 20 மடங்கு எடையைத் தூக்கக்கூடியது.
- எறும்பின் சராசரி வாழ்நாள் 55 நாட்கள்.
- எறும்பிற்கு நுரையீரல் இல்லை. தமது உடலில் உள்ள சிறு துளைகள் மூலமே சுவாசிக்கின்றன.
- ஒரு கூட்டத்தில் 7 லட்சம் எறும்புகள் வரை காணப்படும்.
- ராணி எறும்பு ஆயுட்காலம் முழுவதும் முட்டை இட்டுக்கொண்டே இருக்கும்.
- உலகில் வெளிர் மஞ்சள் மற்றும் பச்சை நிறமுள்ள எறும்புகளும் உள்ளன.

## கண்டுபிடிப்புக்களும் ஆண்டுகளும்







| | | |
|---|---|---|
| 1. நுணுக்குக்காட்டி | - | 1590 (ஒல்லாந்து) |
| 2. பாரமானி | - | 1644 (இத்தாலி) |
| 3. பியானோ | - | 1711 (இத்தாலி) |
| 4. பெரசூட் | - | 1797 (பிரான்ஸ்) |
| 5. குளோரோஃபோம் | - | 1831 (பிரான்ஸ்) |
| 6. தீப்பெட்டி | - | 1855 (சுவீடன்) |
| 7. நைலோன் | - | 1937 (அமெரிக்கா) |
| 8. லேசர் | - | 1960 (அமெரிக்கா) |

இ.ஹரிக்ஷன்,
மட்/புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு.









# இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றிய கவிஞர் ஆனந்த சமரகோன்



1911 ஆம் ஆண்டு ஜனவரி 13 ஆம் திகதி கொழும்பு மாவட்டத்தி லுள்ள பாதுக்கை வட்ட ருக்க என்ற கிராமத்தில் பிறந்த கவிஞர் ஆனந்த சமரகோன் அவர்கள் சிங்கள இலக்கியத்துறைக் கும் பாடல்துறைக்கும் அரும் சேவையாற்றிய ஒருவராவார். இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவரும் இவரே. இவருடைய தந்தையார் பெயர் சாமுவேல் சமரகோன். தாயார் பெயர் டொமின் காபீரிஸ். கவிஞருக்கு அவருடைய பெற்றோர் ஆரம்பத்தில் இட்ட பெயர் ஜோஜ் வில்ஃபிரட் அல்விஸ் சமரகோன் என்பதாகும்.

சிங்கள இலக்கியப் பாடல் துறைக் குப் புத்துயிர் அளித்து புதிய சங்கீத முறையொன்றை உருவாக்கி பொருத்த மான தனித்துவப் பணியொன்றை உருவாக்கப் பாடுபட்டார். கிராமியச் சூழல் இவருடைய பாடல்களுக்கு அடித்தளமாக அமைந்தது. சிங்களத் திரைப்படங்களுக்கும் இவர் பாடல்களை எழுதியுள்ளார். தேச பக்தியும், தேசிய உணர்வு களையும் ஊட்டும் பாடலான 'மனநன்ஜன தந்ஷனீய லங்கா'... என்ற பாடல் ஆனந்த சமரகோன் இயற்றிய மிகச் சிறந்த பாடலாகும். இலங்கையின் தேசிய கீதம் ஒலிக்கும் நேர மெல்லாம் அவர் நாமமும் இலங்கை மக்களின் உள்ளங்களில் ஒலித்துக்கொண்டு இருக்கும்.

சோ.வினோர்ச்குமார்,
ஸ்ரீகோரக்கர் த.ம.வித்., சம்மாந்துறை.

## செய்தித் தாள்



அழகான காகிதத்தில்
அச்சிட்ட செய்தித்தாள்
நாள்தோறும் வருகுது
நல்ல செய்தி தருகுது!

அனல் பறக்கும்
செய்திகளை
அற்புதமாய்த் தருகுது
அயல் நாட்டு
நடப்பெல்லாம்
அழகழகாய்த் தருகுது!

நல்ல பல விடயங்களை
நாம் படிக்கத் தருகுது
நாளும் செய்தி பார்ப்பதால்
நமது அறிவும் வளருது!

எஸ்.எம்.எஃப்.மாஹிரா,
பூவல்ல மு.க.வி., பூவல்ல.

## அறிவுத் தகவல்கள்

- காடுகளே இல்லாத தெற்காசிய தீவு மாலைதீவு ஆகும்.
- உலகின் மிகப் பழமையான கலைக்களஞ்சியம் 'இயற்கை வரலாறு' ஆகும்.
- பலுகிஸ்தான் பீடபூமி பாகிஸ்தானில் அமைந்துள்ளது.
- தமிழில் முதன்முதலில் தோன்றிய குழந்தைகள் பத்திரிகை 'பாலதீபிகை' ஆகும்.
- 'தவளகிரிமலை' நேபாளத்தில் காணப்படுகின்றது.
- பேசுவதற்குப் பழகமுன்னரே, ஓவியம் வரையக்கற்றுக்கொண்ட ஓவியர் பப்பலோ பிகாஸோ ஆவார்.
- 'கவிஞர்களின் கவிஞன்' என அழைக்கப்பட்ட ஆங்கிலக் கவிஞர் 'எட்மண்ட் ஸ்பென்ஸர்' ஆவார்.
- கடலலையில் மின்சாரம் தயாரிக்கும் நாடு பிரான்ஸ்.
- இலங்கைக்குரிய விசாலமான தீவு தலை மன்னார்.

என்.எப்.அய்மா,
கமு/அல்-ஹம்றா வித்தியாலயம், மருதமுனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் வாசகர் மடல்



**வி**ஜய்யே! நீ வழங்கி வருகின்ற ஒவ்வொரு அம்சமும் சிறப்பானது. உன்னிடமிருந்தே நான் அதிகமான விடயங்களைக் கற்றுக்கொள்கின்றேன். 'ஆங்கிலமொழிப் பயிற்சி', 'கல்வி முகாமைத்துவம்', 'இராமாயணம்' என்பன எனக்கு மிகவும் பிடித்தவை. நீ வழங்குகின்ற புதிய விடயங்களை விரும்பி வாசிப்பேன். 'எலிகளை விழுங்கும் செடி' எனும் ஆக்கம் ஆச்சரியமாகவும் சுவாரஸ்யமாகவும் அமைந்திருந்தது. **-எஃப்.நுஸ்ரா,**
**தோரயாய, குருநாகல்.**

**'சி**றந்த தலைவராக வர வேண்டுமானால்.....' என்ற ஆக்கம் தலைமைத்துவத்துடன் தொடர்புடைய விடயங்களை தெளிவாக விளக்கியிருந்தது. உனக்கு எனது பாராட்டுக்கள்.
**-எம்.ஆர்.நஸ்ரின் பானு,**
**கல்லொழுவ,மினுவங்கொடை.**




**'பூ**மியதிர்ச்சி குறித்து எதிர்வுகூறும் மிருகங்கள்' ஆக்கத்தினூடாக, விவரிக்கப்பட்டிருந்த ஒவ்வொரு விடயமும் என்னை [illegible]பக்க வைத்தது. இது சுவாரஸ்யமான ஓர் ஆக்கம் என்றால் தவறில்லை. 'அப்பிள் நிறுவுனர் ஸ்டீவ் ஜொப்ஸ்' தொடர்பான ஆக்கம் என்னைக் கவர்ந்தது. 'இராமாயணம்' விறுவிறுப்பாக நகர்ந்து செல்கின்றது.
**-எம்.முன்சிர்,**
**பிரதான வீதி, ஹல்துமுல்ல.**

**'ஒ**ல்லாந்தர்', 'இராமாயணம்' ஆகியவை எனது பாடசாலைக் கல்விக்குப் பேருதவி புரிகின்றன. புதன்கிழமையென்றால் உன்னை யார் முதன்முதலில் வாசிக்கிறார் என்பதற்கு எனது வீட்டில் ஒரு போட்டியே நிகழ்ந்துவிடும். அறிவைத் தேடும் எல்லோர் மனதிலும் நீ நிலைத்துவிட்டாய்.
**-ரொஷான் அஞ்சலோ,**
**கொட்டாஞ்சேனை.**

**வா**ராவாரம் புதுப்புது அம்சங்களுடன் வெளிவரும் உன்னை, வாசித்துப் பயன் பெறுபவர்களில் நானும் ஒருவன். 'கல்வி முகாமைத்துவம்', 'இராமாயணம்', 'ஸ்டீவ் ஜொப்ஸ்','பூமியதிர்ச்சி குறித்து எதிர்வுகூறும் மிருகங்கள்', 'விண்வெளித் தகவல்கள்', 'கணினி ஐயங்கள்' உட்பட, உன்னில் பிரசுரமாகியிருந்த அனைத்தும் பாராட்டத்தக்கவை.
**-எச்.சம்சாத்பேகம்,**
**தெனியாய வீதி,**
**இறக்குவானை.**

**'சி**ங்களப்பாடம்' பகுதியூடாக, சிங்கள மொழியில் உரையாடிப் பழக வாய்ப்புக் கிடைக்கின்றது. 'வாரம் ஒரு நாடு' பகுதியூடாக, அறியாத நாடுகள் பற்றியும் அறியத்தருகின்றாய். உனது புகழ் உலகெங்கும் பரவி சாதனைகள் பல புரிந்திட மனமார்ந்த வாழ்த்துக்கள்.
**- பு.கயானி,**
**பூனாகலை வீதி,**
**பண்டாரவளை.**

*'ஐக்கிய நாடுகள் சபை' எனும் ஆக்கம் பல்வேறு முக்கிய விடயங்களை உள்ளடக்கியதாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. 'ஸ்டீவ் ஜொப்ஸ்' பற்றிய ஆக்கம் சுப்பர். ஏனைய பத்திரிகைகளில்*




*வெளியான தகவல்களைவிட மேலதிகமான, வித்தியாசமான தகவல்களை இதில் வாசித்தறியக்கூடியதாக இருந்தது.*
**-பி.வேணுஜன்,**
**ஆரையம்பதி, மட்டக்களப்பு.**

**இந்த இதழில் (02.11.2011) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**
**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 09.11.2011.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**வாசகர் மடல்,**
**'விஜய்'**
**த.பெ.எண் 2037,**
**கொழும்பு.**

## உருவை அமைக்க — 1




## அருகிலுள்ள சொற்களை எழுத்துக்கூண்டிற்குள் இனங்கண்டு நிறந்தீட்டுக — 2

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| red | d | e | v | o | l | g |
| ham | r | e | d | p | h | k |
| coat | q | c | h | z | j | c |
| glove | p | o | a | a | f | o |
| block | v | a | m | m | n | l |
| fox | q | t | f | o | x | b |

## சரியான சொல்லில் கோடிடுக — 4

1. கட்பனை/ கற்பனை/ கற்பணை
2. செழிப்பு/செலிப்பு/செளிப்பு
3. பரீட்சார்தி/ பரீட்சார்த்தி / பரிட்சாத்தி
4. பொட்காலம்/ பொற்க்காலம்/ பொற்காலம்
5. வலையள்/ வளையல்/ வளயல்

## எத்தனை உள்ளன? — 3








**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**
1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2011.11.09 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.
**அற்லஸ் அறிவுக்கு விருந்து 337**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**


## பொருத்தமான விடையை தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக — 5


1. அந்தப் பிள்ளை ..........................................
(அழுதார்/அழுதது)
2. நடந்து முடிந்த ஒரு சம்பவத்தைக் குறிப்பது .......................................... ஆகும்.
(எதிர்காலம்/ இறந்தகாலம்)
3. வாரி வழங்குபவரைக் குறிக்கப் பயன்படும் சொல் .......................................... (வள்ளல்/எஜமான்)
4. குயில் கூவும் என்பது போல; ஆந்தை ..........................................(உறுமும்/அலறும்)

## அறிவுக்கு விருந்து - 334 விடைகள்


**போட்டி: 01**



**போட்டி: 02**



**போட்டி: 03**




**போட்டி: 04**

1. எழில் - அழகு
2. யாக்கை - உடல்
3. தாரகை - உடு
4. மேகம் - முகில்

**போட்டி: 05**

3, 1, 5,
2, 4, 6

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 334 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எஃப்.சுப்னா,
வைத்தியசாலை வீதி, பெரிய நீலாவணை.

**போட்டி: 02**
எஃப். அமானி, பாண்டியன்குளம், நாச்சியாதீவு.

**போட்டி: 03**
ஆர்.தீபிகா, ஆசிரியர் வீதி,சங்கத்தானை.

**போட்டி: 04**
வை.சிவதர்சன், போதிருக்காராம வீதி,
களுபோவிளை.

**போட்டி: 05**
எஃப். அப்பாஸ், கல்லொழுவ, மினுவங்கொடை.

பாராட்டுப் பெறுவோர்:

- ★ வே.தம்மிகா, பண்டத்தரிப்பு.
- ★ எம்.நஸ்மின், நாபாவளை.
- ★ எஃப்.ஷாமியா, மாத்தறை.
- ★ ஆய்ஷா ஆரா, வீரபொகுன.
- ★ சி.சீலன், பளை.
- ★ எஸ்.ஜீவிகா, மாத்தளை.
- ★ ரசீன் அஹமட், பாலாவி.
- ★ எம்.கபீர், சியம்பலாகஸ்கொடுவ.
- ★ எம்.தாஸிம், பெரியமுல்ல.
- ★ வேணு பிரசாத், சாமிமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியம் வரைவோம் - 74

வழங்குபவர் - ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப்

## மரச் செதுக்கல் வேலை



மரச் செதுக்கல் வேலைகள் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் நீண்ட காலமாகவே மேற்கொள்



ளப்பட்டு வரும் ஒரு கலைக் கைத்தொழிலாகும். இதற்கு சிறந்த உதாரணமாக, 'எம்பெக்கே' மரச் செதுக்கல்களைக் குறிப்பிடலாம்.

இன்றளவில், நாடளாவிய ரீதியில் மரச் செதுக்கல் அலங்காரங்கள் பல்வேறு ரசனைகளுடன் நடைபெறுகின்றன. பாரம்பரிய, நவீன பாணியிலும் இரண்டும் கலந்ததாகவும் மூன்று பிரிவுகளுக்குட்



பட்டதாக கண்கவர் அலங்காரங்கள் செய்யப்படுகின்றன.

அந்தவகையில், வீட்டுத் தேவைகளுக்கு பயன்படுத்தப்படும் கதவு, ஜன்னல், தூண்கள், கூரை வேலைப்பாடுகள் போன்றவற்றில் பல்வேறு பாரம்பரிய அலங்காரங்களைக் காணலாம். அவற்றில் பினரமல், பலாபெத்தி, லியவெல, தாமரை மலர், குந்திரிக்கன் போன்ற பாரம்பரிய அலங்காரங்கள் குறிப்பிடத்தக்கவை. அத்துடன், வீட்டுத் தளபாடங்களான கதிரை, மேசை, கட்டில் போன்றவற்றில் தியரெல்ல, கினிதெல்ல, லியவெல, நாரிலதா உட்பட, பல்வேறு உருவங்களைக் காணலாம்.

(தொடரும்)



## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எம்.சதீக்,
ஜப்பார் மத்திய கல்.,
கண்டி.




டி.தனுஷன்,
வாணி த.வித்.,
பள்ளேகலை.



ஏ.அஸ்மா,
ஸாதாத் ம.வித்., கொடபிடிய.




த.பிரியங்கன்,
இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.




வை.ஜீலக்ஷன்,
குவன்வெல்லை மு.வித்.,
குவன்வெல்லை.



ஏ.திருஸ்னோராஜ்,
பசறை தமிழ் ம.வித்.,
பசறை.



அஷ்பாக் பைஸல்,
அஸ்ஹர் கல்லூரி, அக்குறணை.



உ. லபிஷினி,
பெண்கள் உ/தர பாட.,
கண்டி.



எஃப்.அஸ்கா,
ஹமீதியா மு.ம.வித்., கும்பலங்க.



ஸனீஹா ஷரீப்,
மதீனா தேசிய பாட., சியம்பலாகஸ்கொடுவ.



எம்.முஜீப்,
அல்-அஷ்ரக் தே.பாட., கல்முனை.



சோ.விஜோஜ்குமார்,
ஸ்ரீ கோரக்கர் த.ம.வித்.,
சம்மாந்துறை.



மீசாலை கிழக்கைச் சேர்ந்த குலராசா-விஜயலட்சுமி தம்பதியரின் செல்வப் புதல்வன் கு.சகாயன், 02.11.2011 ஆகிய இன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் இறைவனின் அருள் பெற்று, நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: யோ.அபிராமன்)



வியாங்கல்லையைச் சேர்ந்த பஷான்-றிப்னா தம்பதியரின் செல்வப் புதல்வன் அப்துர் ரஹ்மான், 03.11.2011 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: அகீலா அஷ்ரப்)



மாதிப்பொளையைச் சேர்ந்த ஜிப்ரி-பாருஸா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா றிஹ்மா, 06.11.2011 அன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: றிஹானா)



ஹொரவப்பொத்தானையைச் சேர்ந்த நிஸார்-நஸீரா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹம்மது அஹ்த்திர், 06.11.2011 அன்று தனது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: எஃப்.சிரோசியா)



வியாங்கல்லையைச் சேர்ந்த இஷ்ரத்-சிபானா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா அஷ்பா, 27.10.2011 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: அப்துல் பாஸித்)



வத்தேகெதரையைச் சேர்ந்த தஸ்லிம்-நசிரா தம்பதியரின் செல்வப் புதல்வன் உஸ்மான், 25.10.2011 அன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் இறைவனின் அருள் பெற்று, நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல நேரம்

ராகுல், கோகுல் இருவரும் இரட்டையர்களாகப் பிறந்த சகோதரர்கள். இருவருமே தோற்றத்தில் ஒரே மாதிரி இருப்பார்கள். ஆனால், இருவருக்கும் குணத்தில் வேறுபாடு இருந்தது. ராகுல் இனிமையாகப் பேசுவான். கோகுல் கடுமையாகப் பேசுவான்.


ராகுலும், கோகுலும் வெவ்வேறு இடத்தில் ஆளுக்கொரு பலசரக்குக் கடை வைத்திருந்தனர். ராகுல் ஆறு மணிக்கே கடையைத் திறந்து வியாபாரத்தை ஆரம்பித்து விடுவான். கோகுல் எட்டு மணிக்குத்தான் கடையைத் திறப்பான்.

ராகுல், கடைக்கு வருபவர்களிடம், ''என்ன வேண்டும் அக்கா? என்ன வேண்டும் அண்ணா'' என்று மிக அன்பாக இன்முகத்துடன் கேட்பான்.

கோகுலோ யாராவது பொருள் கேட்டால்கூட எரிந்து விழுவான். ''எல்லோரும் ரூபாய் தாளை எடுத்து வந்தால், எப்படி? இங்கே என்ன சில்லறை கொட்டிக் கிடக்கின்றதா?'' என்று சிடுசிடுப்பான்.

ஆறு மாதங்கள் கடந்தன. ராகுலின் கடையில் வியாபாரம் நன்றாகப் போய்க்கொண்டிருந்தது. கோகுலின் கடையில் கூட்டமே இல்லை.

''நாம் இரண்டு பேரும் ஒரே நேரத்தில்தானே கடையை ஆரம்பித்தோம். உன் கடையில் மட்டும் எப்பவும் ஒரே கூட்டமாக இருக்கின்றது. என் கடைக்கு மட்டும் ஒருவரும் வருவதில்லையே'' என ராகுலிடம் தன் சோகத்தைக் கொட்டித் தீர்த்தான், கோகுல்.



ராகுல் கோகுவிடம், ''முதலில் நாம் செய்கின்ற தொழிலை நேசிக்கவேண்டும். அதுமட்டும் போதாது செய்கின்ற வேலையை இன்முகத்தோடு செய்ய வேண்டும். அதேநேரம் சுறுசுறுப்பாகவும் அழகாகவும் செய்யவேண்டும். தேவையான நேரங்களில் சீக்கிரமாகவும் செய்து முடிக்கவேண்டும்'' என்று விளக்கம் அளித்தான்.

ராகுலின் போதனையில் கோகுலுக்குப் போதிய தெளிவில்லை. அதனால், அவனிடமிருந்து வந்த பதில் ''அதெல்லாம் ஒன்றுமில்லை. உனக்கு எப்பவுமே நல்ல நேரம். எனக்கு ஒரே கெட்ட நேரம்'' என்று புலம்பினான்.

இவனுக்கு எப்படி புரிய வைப்பது என்று சிந்தித்த ராகுல், தனது பதிலை சற்று நிதானமாகவும், தெளிவாகவும் எடுத்துக் கூறினான்.

''நல்ல நேரம் என்பது தானாக வராது கோகுல். நல்ல நேரத்தை நாம்தான் உருவாக்க வேண்டும். முன்னேற வேண்டும் என்ற நல்ல சிந்தனை வேண்டும். ஜெயிப்பேன் என்ற நம்பிக்கை வேண்டும். நல்ல சொல்லும், நல்ல செயலும் இருந்தால் நல்ல நேரமும், நல்ல வாழ்க்கையும் நிச்சயமாக அமையும்'' என்றான் கோகுல்.

ராகுலின் பேச்சு அவனுக்குப் புதிய பாடத்தைக் கற்று தந்ததைப் போல் இருந்தது. 'அவன் சொல்வதையும்தான் ஒருமுறை செயற்படுத்தித்தான் பார்ப்போமே' என்று நினைத்தான். சில நாட்களில் கோகுலின் கடையிலும் கூட்டம் நிரம்பி வழிந்தது.

எந்த ஒரு செயலையும் தவறாகச் செய்துவிட்டு, நேரத்தின் மீதும், சூழ்நிலையின்மீதும் பழி போடக்கூடாது. செய்யும் தொழிலை சரியாக திறம்படச் செய்தால், எப்போதுமே நல்ல நேரம்தான்.

# ராமுவின் தீபாவளி



அன்று தீபாவளி தினம். மதியம் இரண்டு மணியாகிவிட்டது. அந்தக் கிராமம் சற்று அமைதியாக இருந்தது. எனினும், ஆங்காங்கே அவ்வப்போது, பட்டாசு வெடிக்கும் சத்தங்கள் கேட்டவண்ணமே இருந்தன. அத்தோடு, வீட்டுக்கு வீடு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் சத்தமும் வந்துகொண்டிருந்தன. சொல்லப்போனால், அந்தக் கிராமத்தில் உள்ள அனைவருமே தொலைக்காட்சியின் சிறப்பு நிகழ்ச்சிகளில் மூழ்கி இருந்தனர்.

ஆனால், ஆறாவது படிக்கும் சிறுவன் ராமு, மட்டும் 'குறுகுறு' வென்று என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டிருந்தான். அனைத்து வெடிகளையும் வெடித்து விட்டான். இப்போது அவன் கையில் ஒரு சரவெடிக் கட்டு மட்டும் மிகுதியாக இருந்தது. அதை இப்போது கொளுத்தவா அல்லது இரவில் கொளுத்தவா என்று அவன் யோசித்துக் கொண்டிருந்தான். அப்போது கடைசி வீட்டில் உள்ள நாய் டொமி அவனது கண்ணில் பட்டது. பட்டாசு வெடிக்கும் சத்தத்திற்குப் பயந்து போய் தெரு ஓரமாகப் படுத்துக் கிடந்தது. அதைப் பார்த்ததும் குறும்புக்கார ராமுவிற்கு ஒரு யோசனை தோன்றியது.

அவன் கையில் வைத்திருந்த சரவெடியை அந்த டொமியின் வாலில் கட்டிவிட்டால் என்ன என்று யோசித்தான். உடனே அதையும்தான் செய்து பார்த்துவிடுவோமே என்ற முடிவுக்கு வந்துவிட்டான். பாவம், அந்த நாய் டொமிக்கு இந்த தீபாவளி போதாத நேரம்போலும். தெரிந்தவன்தானே ஏதோ வாலைத் தொட்டு விளையாடுகிறான் என்று சாதாரணமாக நினைத்து அமைதியாக இருந்துவிட்டது. அடுத்த நிமிடமே சரவெடியை நாயின் வாலில் மெதுவாகக் கட்டித் திரியில் நெருப்பைப் பற்ற வைத்தான் ராமு.

திரியில் நெருப்புப் பற்றிய சில வினாடிகளில், 'படபட'வென்று பட்டாசு வெடித்து நாலாபுறமும் சிதறியது. நாயின் உடலிலும் அந்த தீப்பொறி பட்டதால், டொமி பயத்தில் தலைதெறிக்க ஓடியது.

எதிரே உள்ள இடத்தில்தான் ராமு வீட்டு மாட்டுக் கொட்டகையும், அவற்றுக்கு தீவனமான பெரிய வைக்கோல் போரும் இருந்தது. அந்த நாய் தீப்பொறியுடன் எரிந்து வெடிக்கும் சரவெடியுடன் அச்சத்தில் ஓடி வைக்கோல் போரில் விழுந்து, புரண்டு குரைத்தபடி தப்பியோடி மறைந்தது. இதனால், ராமுவின் வீட்டு வைக்கோல் போர் முழுவதும் 'கபகப' வென்று தீப்பிடித்து எரிய ஆரம்பித்தது.

ராமு, திகைத்துப்போய், ''தீ.....தீ.....'' என்று அலறினான். அந்த சத்தம் கேட்டு, தெருவில் உள்ள அனைவரும் ஓடி வந்து வைக்கோல் போரில் எரிந்துகொண்டிருந்த தீயை அணைக்க முயன்றனர். ஆனால், மாட்டுக் கொட்டகையையும் மாடுகளையும்தான் காப்பாற்ற முடிந்தது. பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள வைக்கோல் போர் கொழுந்துவிட்டு எரிந்து சாம்பலானது. ராமுவுக்கே எதிர்பாராத தீபாவளியாக அடியும், திட்டும் பரிசாகக் கிடைத்தது.

உயிர்களிடத்தில் அன்பு வேண்டும், தன் வினை தன்னைச் சுடும் என்பதையெல்லாம் அப்போதுதான் அனுபவபூர்வமாக உணர்ந்தான் ராமு.

# நாணயம்

ஆடிசை வாசலில் யாரோ, கூப்பிடும் குரல் கேட்டு வெளியே வந்தான் கோபி. மின்சாரப்பட்டியலை கையில் வைத்துக்கொண்டு வாசலில் நின்றுகொண்டிருந்தார் மின்சார சபை ஊழியர்.

''தம்பி மின்சாரக் கட்டணம் கட்டாதவர்கள் பட்டியலில் உன் வீட்டு இலக்கமும் வந்திருக்கின்றது. கட்டணத் தொகை ஐநூறு ரூபாய். நாளைக்குத் தான் கட்டணம் கட்டவேண்டிய கடைசித் திகதி பணம் கட்டவில்லையெனில், இணைப்பைத் துண்டித்து விடுவோம்'' என்று எச்சரித்து விட்டுப் போனார்.



கோபியோ, பரம ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்தவன். பதினொராம் வகுப்பு பரீட்சை எழுதி முடித்திருக்கின்றான். அவனது தந்தை வெளியூரில் தங்கி வேலை பார்த்து வருகிறார். அவரிடம் இருந்து மாதம் தோறும் பணம் வரும். இந்த மாதம் இதுவரையில் பணம் வரவில்லை. அவனது அம்மா பக்கத்து ஊரில் றப்பர் தொழிற்சாலையில் வேலை செய்கிறார். அவர்களுக்கும் வாரத்திற்கு ஒருமுறைதான் சம்பளம் கொடுப்பார்கள். அம்மாவிற்கு சம்பளம் கொடுக்க இன்னும் 3 நாட்கள் உள்ளன.

ஆனால், நாளை மின்சாரக் கட்டணம் கட்டாவிட்டால், மின் இணைப்புத் துண்டிக்கப்படும் என்ற நிலை. கோபி என்ன செய்வது என்று யோசித்தான். அவன் மனதில் ஓர் எண்ணம் உதித்தது. அந்தநேரம் பார்த்து அவனைத் தேடி, பலகாரக் கடை பாலையா வந்தார். அதே தெருவில் பத்து வீடு தள்ளி வசிப்பவர்தான் அவர்.

''தம்பி கோபி, பக்கத்து ஊர் திருவிழாவிற்காக, அங்கே பலகாரக்கடை போடப் போகின்றேன். என்னிடம் வேலை பார்ப்பவர், சுகயீனம் காரணமாக ஊருக்குப் போய்விட்டார். உனக்கு இப்போது விடுமுறை தானே? இன்றைக்கு ஒரு நாள் மட்டும் வேலைக்கு வருகின்றாயா? சம்பளம் நானூறு ரூபாய் தருகிறேன்'' என்றார், பாலையா.

அவரது வார்த்தைகளால் கோபியின் மனதில் உற்சாகம் ஊற்றெடுத்தது. நாளைக்குள் மின்சாரக் கட்டணம், கட்டுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பு, அம்மாவின் சுமையைக் குறைத்துவிடலாமே என்று தனக்குள் முடிவு செய்துகொண்டான்.

''ஐயா, நான் கட்டாயம் வருகிறேன். தயவு செய்து ஒரு நூறு ரூபாய் சேர்த்து ஐநூறு ரூபாயாக கொடுங்கள். இந்த மாதம் மின்சாரக் கட்டணம் கட்டப் பணம் தேவைப்படுகின்றது'' என்று கெஞ்சினான். அவன்மேல் இரக்கப்பட்டு, பாலையாவும் அதற்கு ஒப்புக்கொண்டார்.

அன்று நாள் முழுவதும் கடையில் நல்ல வியாபாரம். பம்பரமாக சுழன்று வேலை பார்த்தான் கோபி.

இரவு எட்டு மணிக்கு வேலை முடிந்தது. உடனே பாலையா, கோபியைப் பார்த்து, ''தம்பி, இனி நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். பஸ்ஸைப் பிடித்து ஊருக்குப் போ'' என்றார். கோபியும் புறப்படத் தயாரானான். அப்போது மின்சாரம் தடைப்பட்டுவிட்டது. கடையில் இருந்த மெழுகுவர்த்தியை ஏற்றினார் பாலையா. கல்லாவில் இருந்து பணத்தை எடுத்து கோபியிடம் கொடுத்தார். ''இந்த சில்லறையை பஸ் செலவுக்கு வைத்துக்கொள்'' என்று பெருந்தன்மையாகக் கூறினார்.

அடுத்த ஐந்து நிமிடத்தில், மின்தடை நீங்கி, வீதி எங்கும் ஒளிவெள்ளம் பரவியது. அதுவரை தன் கையில் வைத்திருந்த சம்பளத்தை அப்போதுதான், பார்த்தான் கோபி. அவன் கையில் 500 ரூபாய்க்குப் பதிலாக 1000 ரூபா தாள் ஒன்று இருந்தது. கோபி அதிர்ச்சி அடைந்தான். கடைக்காரர் மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில் தவறுதலாக கொடுத்திருக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டு கடையை நோக்கி ஓடினான்.

''ஐயா, நீங்கள் ஐநூறு ரூபாய்க்குப் பதிலாக ஆயிரம் ரூபாய் தாளைக் கொடுத்துள்ளீர்கள்'' என்று திருப்பிக் கொடுத்தான். அவனது நாணயத்தைப் பார்த்த, பாலையா அவனை நோக்கி ''உன்னுடைய கஷ்டமான சூழ்நிலையிலும் அடுத்தவருடைய பணத்துக்கு ஆசைப்படாத உன் நாணயம் யாருக்கும் வராதப்பா, நீயே இந்த 1000 ரூபாவையும் சேர்த்து வைத்துக்கொள்'' என்று அவனது முதுகைச் செல்லமாகத் தட்டிக் கொடுத்தார் பாலையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் பயில்வோம்



319

ආයුබෝවන්
ஆயுபோவன்
வணக்கம்

**இன்றைய பாடத்தில் லதா-உமா-உமாவின் அம்மா ஆகியோருக்கு இடையில் நடைபெறும் உரையாடலைப் பார்ப்போம்**

## உமாவின் வீட்டிற்கு லதா வருதல்

**ලතා: ආයුබෝවන් උමා.**
ஆயுபோவன் உமா.
**லதா: வணக்கம் உமா.**

**උමා: ආයුබෝවන් ලතා. එන්න... වාඩිවෙන්න.**
ஆயுபோவன் லதா. என்ன... வாடிவென்ன.
**உமா: வணக்கம் லதா. வாருங்கள்..உட்காருங்கள்.**

**අම්මා: ආ...ලතා කොහොමද දුව?**
ஆ...லதா கொஹொமத துவ?
**அம்மா: ஆ... லதா எப்படி மகள்?**

**ලතා: හොඳයි අම්මේ.**
ஹொந்தய் அம்மே.
**லதா: நல்லம் அம்மா.**

**අම්මා: ලතා මෙන්න අලුත් කෑමක්.**
லதா மென்ன அலுத் கேமக்.
**அம்மா: லதா இதோ ஒரு புதுவகை உணவு.**

**ලතා: මේ මොනවද අම්මේ?**
மே மொனவத அம்மே?
**லதா: இது என்ன அம்மா?**

**අම්මා: මේ මුංකැවුම්. කාලා බලන්නකෝ!**
மே முங்கெவும். காலா பளன்னகோ!
**அம்மா: இது பயற்றம்பலகாரம். சாப்பிட்டுப் பாருங்களேன்!**

**ලතා: හරි රසයි අම්මේ.**
ஹறி ரஸய் அம்மே.
**லதா: நல்ல ருசி அம்மா.**

**අම්මා: ලතා සිසිල් බීම බොනවද? තේ බොනවද?**
லதா சிசில் பீம பொனவத? தே பொனவத?
**அம்மா: லதா குளிர்பானம் குடிக்கிறீர்களா? தேநீர் குடிக்கிறீர்களா?**

**ලතා: තේ හොඳයි අම්මේ.**
தே ஹொந்தய் அம்மே.
**லதா: தேநீர் நல்லது அம்மா.**

**ලතා: දවසක ගෙදර ඔක්කොම අපේ ගෙදර එන්න.**
தவசக கெதற ஒக்கொம அபே கெதற என்ன.
**லதா: ஒரு நாளைக்கு வீட்டிலுள்ள எல்லோரும் எங்கள் வீட்டிற்கு வாருங்கள்.**

**අම්මා: අපි දවසක එන්නම් දුව.**
அபி தவசக என்னம் துவ.
**அம்மா: நாங்கள் ஒரு நாளைக்கு வருகிறோம் மகள்.**

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. எல்லோரும் எங்கள் வீட்டிற்கு வாருங்கள்.
..............................................................................

ii. இது ஒரு புதுவகை உணவு.
..............................................................................

iii. குளிர்பானம் குடிக்கிறீர்களா?
..............................................................................






**✱ பின்வரும் கலப்பு வாக்கியங்கள், பெயர்ச்சொல்லுக்குரிய வாக்கியப் பகுதிகளைக் கொண்ட (Noun Clauses) கலப்பு வாக்கியங்கள் என குறிப்பிடப்படுகின்றன.**

(A) நான் ரயில் ஒன்றில் பயணித்துக்கொண்டு இருப்பதைப் போன்று கனவுகண்டேன்.
I dreamed that I was travelling in a train.

(B) தான் புதிய ஒரு ஷேர்ட் அணிந்துகொண்டிருப்பதாக ரஞ்ஜித் கூறினான்.
Ranjith said that he was wearing a new shirt.

(C) அந்தச் சிறுவர்கள் நீந்தப் போகின்றார்கள் என்பது எனக்குத் தெரியும்.
I know that the children are going to swim.

(D) நீ உண்மையைச் சொல்கின்றாய் என நாங்கள் நம்புகின்றோம்.
We believe that you are telling the truth.

(E) முகாமையாளர் உன்னைச் சந்திப்பார் என நான் நம்புகின்றேன்.
I hope that the manager will meet you.

(F) பரீட்சை மிகவும் கஷ்டமாக இருந்ததாக ரொஹான் கூறினான்.
Rohan said that the examination was very difficult.

(G) அது தவறானது என அவன் நினைப்பதில்லை.
He doesn't think that it is wrong.

(H) அவன் பரீட்சையில் சித்தியடைவான் என நான் நிச்சயமாக நம்புகின்றேன்.
I certainly hope that he will pass the examination.

(I) அந்த நபர் வீட்டைவிட்டு வெளியேறிவிட்டார் என உனக்குத் தெரியுமா?
Do you know that the person has left the house.

**✱ பின்வரும் கலப்பு வாக்கியங்கள் சற்று வித்தியாசமானவை. அவற்றை இங்கே அவதானிப்போம்.**

(A) அந்த சைக்கிள் புதியதொன்றாகும்.
The bicycle is a new one.
(தனி வாக்கியம்-Simple Sentence)

(B) எனது தந்தை அதை வாங்கினார்.
My father bought it.
(தனி வாக்கியம்-Simple Sentence)

**✱ மேற்படி இரண்டு தனித்தனி வாக்கியங்களையும் ஒன்றிணைத்து, ஒரு கலப்பு வாக்கியமாக பின்வருமாறு அமைக்கலாம்.**

(C) எனது தந்தை வாங்கிய சைக்கிள் புதியதொன்றாகும்.
The bicycle which my father bought is a new one.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

(D) அந்தப் பொதி எனது அலுமாரியில் இருக்கின்றது.
The parcel is in my almirah.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(E) நான் அதை நேற்றுப் பெற்றுக்கொண்டேன்.
I received it yesterday.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(F) நான் நேற்றுப் பெற்றுக்கொண்ட பொதி எனது அலுமாரியில் இருக்கின்றது.
The parcel which I received yesterday is in my almirah.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடாபியின் மரணம்:

# மக்கள் மகிழ்ச்சியில்; சாவேஸ் கவலையில்



லிபியாவின் ஜனாதிபதி கேர்ணல் கடாபி கிளர்ச்சிப் படையினரால் சுட்டுக்கொல்லப் பட்டதையடுத்து, லிபிய மக்கள் மட்டுமன்றி, வெளிநாடுகளில் வசித்து வரு கின்ற லிபியர் களும் மகிழ்ச்சி ஆரவாரங் களில் ஈடுபட் டுள்ளனர். மேலும் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் பலரும் கடாபி யின் மரணம் குறித்து தமது மகிழ்ச் சியை வெளிப்படுத்தியுள்ளனர். லிபியா மீதான தாக்குதல் நடவடிக்கைகளை நேட்டோ படையினரே முன்னெடுத்ததுடன் பிரிட்டன், பிரான்ஸ் நாடுகளின் படையினர் இதில் முக்கிய பங்களிப்பை செலுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

இருந்தபோதிலும் கடாபியின் மரணம் தொடர்பாக பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளதுடன், அவரது மரணம் தொடர்பாக மிகுந்த கவலை அடைந்திருப்பதாக 'வெனிசுவெலா ஜனாதிபதி' சாவேஸ் தெரிவித்துள்ளார். கடாபியை படுகொலை செய்துள்ளனர் என்றும் கூறியுள்ள அவர், அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் இந்த உலகை எரித்துக் கொண் டிருக்கின்றனர் என்றும் குறிப்பிட் டுள்ளார்.





அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...


# துருக்கி பூமியதிர்ச்சியில் பலர் மரணம்

கிழக்கு துருக்கியில் ஏற்பட்ட பாரிய பூமியதிர்ச்சியின் காரண மாக ஆயிரக்கணக்கானவர்கள் மரணமடைந்துள்ளதுடன், நூற்றுக் கணக்கானவர்கள் காயங்களுக்கு உள்ளாகியுமுள் ளனர். மேலும் ஏராளமான வர்கள் இடிபாடுகளுக்குள் புதையுண்டு போயிருப்பதாக வும் தெரிவிக்கப்படுகின்றது.

7.2 ரிச்டர் அளவில் ஏற்பட்ட இந்த பூமியதிர்ச்சியில் 'பேன்' நகரம் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருப் பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.



இந்த பூமியதிர்ச்சியினால் மரணமடைந் தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் தெரிவிக் கப்படுவதுடன், அங்கு மின்சாரம், தொலைபேசி இணைப்புக்களும் அறுந்து போயுள்ளமையினால் மீட்புப் பணியாளர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் சுட்டிக்காட் டப்படுகின்றது.

துருக்கியில் ஏற்பட்ட பூமியதிர்ச்சி களில் பாரிய பூமியதிர்ச்சியாக இந்த பூமியதிர்ச்சியே கருதப்படுகின்றது.

## அற்லஸ் கேள்வி - 332

**கேள்வி:** ஈராக் நாட்டிற்கு எத்தனையாம் ஆண்டில் அமெரிக்கப் படையினர் அனுப்பப்பட்டனர்?

சரியான விடை..............................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 332,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

போட்டி இல - 330 இன் சரியான விடை: பத்தாயிரம் (10,000)

பரிசு பெறுவோர்

வே.தேனுகா,
வட்டவீதி, களுதாவளை.

ஜுஹிசபா பைஷல்,
மில்வீதி, அட்டாளைச்சேனை-01.

எஃப்.இஸ்ரத்,
எஃப்.எச்.மாவத்தை, பலாங்கொடை.

# ஈராக்கிலிருந்து படையினர் முழுமையாக அழைப்பு

## ஜனாதிபதி ஒபாமா அறிவிப்பு

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்க இராணுவத்தினர் முற்று முழுதாக இந்த வருட இறுதிக்குள் அமெரிக்காவிற்கு மீள அழைக்கப்படுவர் என்று ஜனாதிபதி ஒபாமா தெரிவித் துள்ளார்.



2003 ஆம் ஆண்டில் ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசெய்னின் ஆட்சியின்போது, அந்நாட்டில் அணு ஆயுதம் இருப்பதாகக் கூறி அமெரிக்காவின் அப்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷினால் ஈராக்கிற்கு அமெரிக்கப் படையினர் அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர். பின்னர் அங்கு சதாம் ஹுசெய்ன் கைதுசெய்யப்பட்ட மையும் நீதிமன்றத்தினால் அவருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

தற்போதும் அங்கு சுமார் 39,000 அமெரிக்கப் படை யினர் உள்ளனர். இத்தகைய நிலையிலேயே ஈராக் பிரதமர் நூரி மலிகியுடன் கலந்துரையாடியுள்ளதை அடுத்து ஈராக்கிலிருந்து முற்று முழுதாக அமெரிக்கப் படையினர் மீள அழைக்கப்படுவர் என்று ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.



# தெரிந்து கொள்வோம்



* பங்களாதேஷ் நாட்டின் தேசிய விளையாட்டு எது? கபடி



* ஐரோப்பாவில் பரப்பளவில் மிகப்பெரிய நாடு எது?
  பிரான்ஸ்



* இசையை மாத்திரம் தேசிய கீதமாகக் கொண்டுள்ள நாடு எது?
  பஹ்ரைன்
* இந்தியாவின் முதல் 3டி (3D) திரைப்படம் எது?
  1984 ஆம் ஆண்டு வெளியாகிய மலையாள திரைப்படமான 'மை டியர் குட்டிச் சாத்தான்'



* சமாதானத்துக்கான நோபல் பரிசினைப் பெற்றுக்கொண்ட முதல் அமெரிக்க ஜனாதிபதி யார்?
  தியோடர் ரூஸ்வெல்ட் (1906 ஆம் ஆண்டு)




* உலகில் முதல் தபால் தலையானது எப்போது? எங்கே வெளியிடப்பட்டது?
  பிரிட்டனில், 1840 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி



* உலகில் அதிகளவு யுரேனியத்தினை கையிருப்பில்கொண்டிருக்கும் நாடு எது?
  அவுஸ்திரேலியா



* செஞ்சிலுவைச் சங்கத்தினை ஸ்தாபித்தவர் யார்?
  சுவிற்சர்லாந்து நாட்டினைச் சேர்ந்த ஜீன் ஹென்ரி டுனாட்



* 'சம்பா' என்றழைக்கப்படுகின்ற பாரம்பரிய நடனத்துக்குப் பெயர் பெற்ற நாடு எது?
  பிரேசில்



* இந்தியாவானது, தனது எல்லையினை அதிகளவு எந்த நாட்டுடன் பங்கிடுகின்றது?
  பங்களாதேஷ் நாட்டுடன் -4000 கி.மீ.அதிகமாக
* இந்தியாவுடன் எத்தனை நாடுகள் தமது எல்லையினை பங்கிடுகின்றன?
  6 நாடுகள்



* ஐக்கிய நாடுகள் சபையானது, எந்த தினத்தினை சர்வதேச நெல்சன் மண்டேலா தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது?
  ஜூலை 18
* இங்கிலாந்து நாட்டின் மிகப்பெரிய பிராந்தியம் எது?
  யோக்ஷயர்



* அவுஸ்திரேலியா நாட்டில் முதன் முதலில் தொலைக்காட்சி எத்தனையாம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது?
  1956 ஆம் ஆண்டு
* 1945 ஆம் ஆண்டு ஒக்டோபர் 19 ஆம் திகதி 'த ரிபியூன்' என்ற இதழில் வெளியாகிய ஜோர்ஜ் ஓர்வெல் என்பவரின் கட்டுரையில் வெளியாகிய குறிப்பிட்டதொரு சொல்லானது உலகப்புகழ் பெற்றதாகும். அச்சொல் என்ன?
  'கோல்ட் வோர்' (Cold War -பனிப்போர்)
* தென் அமெரிக்க கண்டத்தில் அமைந்துள்ள நாடுகளில் பிரித்தானிய நாட்டின் காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்ட நாடு எது?
  கயானா
* பிரிட்டன் நாட்டினுடைய பிரதமர்களில் படுகொலை செய்யப்பட்ட ஒரு பிரதமர் யார்?
  ஸ்பென்சர் பெர்சிவல்
* உலகிலுள்ள நாடுகளில் சதுர வடிவ தேசியக் கொடிகளைக் கொண்ட நாடுகள் எவை?
  சுவிட்சர்லாந்து, வத்திக்கான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றக்பி கிண்ணம் நியூஸிலாந்து அணிக்கு





2011 ஆம் ஆண்டின் றக்பி உலகக் கிண்ணத்தை நியூஸிலாந்து அணி கைப் பற்றியுள்ளது. நியூஸிலாந்து-பிரான்ஸ் அணிகளுக்கிடையே நடைபெற்ற இறுதிப் போட்டியின்போது, பிரான்ஸை 8-7 என்ற கணக்கில் தோற்கடித்தே செம்பியன் கிண்ணத்தை நியூஸிலாந்து அணி கைப்பற்றியுள்ளது.

மேற்படி இறுதிப் போட்டியின்போது, இரண்டு அணிகளும் விறுவிறுப்பாக மோதின. போட்டியின் இறுதி சந்தர்ப்பத்தில் கிடைத்த பெனால்டியை சரிவரப் பயன்படுத்திக் 'கோலைப்' பெற்றமையினால் போட்டியில் நியூஸிலாந்து வெல்ல முடிந்தது. 24 வருடங்களின் பின்னரே,நியூஸிலாந்து அணி மீண்டும் இரண்டாவது தடவையாக 'றக்பி'யில் உலக செம்பியன் ஆகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1987 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது றக்பி உலகக் கிண்ணப் போட்டியிலேயே நியூஸிலாந்து முதலாவது கிண்ணத்தைக் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 'இந்திய ஆடுகளங்களே தோல்விகளுக்குக் காரணம்'



இங்கிலாந்து வீரர்

இந்தியாவிலுள்ள ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சிற்கு ஏற்றதாக இல்லாமையின் காரணமாகவே, தமது அணி தோல்விகளை சந்தித்ததாக இங்கிலாந்து அணியின் வீரர் பிரஸ்னன் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இந்திய அணி இங்கிலாந்திற்கு சென்றிருந்தபோது, இங்கிலாந்து அணியின் பந்துவீச்சாளர்களான பிராட், எண்டர்சன், பிரஸ்னன் ஆகியோர் தமது வேகப்பந்து வீச்சின் மூலம் அதிக விக்கெட்களை வீழ்த்தியமையால் இந்திய அணியை வெற்றிகொள்ள முடிந்தது. ஆனால், இம்முறை இந்தியா வந்துள்ள இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர்களால் அந்தளவிற்கு சோபிக்க முடியாமல் போயுள்ளது. இதற்கான காரணத்தை தெரிவிக்கும்போதே, பிரஸ்னன் இந்தியாவின் ஆடுகளம் குறித்து தனது அதிருப்தியை தெரிவித்துள்ளார்.

"இந்தியாவின் ஆடுகளங்கள் வேகப் பந்துவீச்சிற்கு சாதகமாக இல்லை. இதனால், இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர்களால் அச்சுறுத்தும் பாணியில் பந்துவீச முடியவில்லை. இதன் காரணமாக, இந்திய துடுப்பாட்ட வீரர்களை மாற்றுவழியில் ஆட்டமிழக்கச் செய்வதற்கு சிந்திக்க வேண்டியிருந்தது. இதுவே இந்திய அணிக்கு சாதகமாக அமைந்துள்ளது" என்றும் பிரஸ்னன் இது தொடர்பாக விளக்கமளித்துள்ளார்.

# டிராவிட், இஷாந்த் விருது பெறுகின்றனர்





இந்திய கிரிக்கெட் அணியைச் சேர்ந்த ராகுல் டிராவிட், இஷாந்த் ஷர்மா ஆகியோருக்கு இந்திய கிரிக்கெட் சபையின் உயர் விருதுகள் வழங்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் தொடக்கம் 2011 செப்டெம்பர் வரையிலான காலப்பருவத்தில் இவர்கள் இருவரும் அணியின் சார்பாக வெளிப்படுத்திய திறமையின் அடிப்படையிலேயே இந்த விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இதன்படி, 15 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டு 1,285 ஓட்டங்களைப் பெற்றமைக்காக, டிராவிட்டுக்கு 'பாலி உம்ரிகர்' என்ற விருதும், 3 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டு 16 விக்கெட்களை வீழ்த்தியமைக்காகவும், இரண்டு தடவைகள் 5 விக்கெட்களை வீழ்த்தியமைக்காகவும், மற்றுமொரு போட்டியில் 10 விக்கெட்களைப் பெற்றமைக்காகவும் இஷாந் சர்மாவுக்கு 'திலிப் சர்தே சாய்' என்ற விருதும் வழங்கப்படவுள்ளது. இந்த விருதுகளை வழங்கும் விழா எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பதிலடியா? பழிதீர்த்தலா? டோனியின் அதிருப்தி



கிரிக்கெட் போட்டிகளின்போது, எதிரணியைத் தோற்கடிப்பதை 'பழி தீர்த்தல்' என்று குறிப்பிடுவது இங்கிதமற்ற ஒரு வார்த்தைப் பிரயோகம் என்று இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் டோனி தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துடனான 5 போட்டிகளைக்கொண்ட ஒருநாள் போட்டித் தொடரை இந்திய அணி 5-0 என்ற கணக்கில் வெற்றியீட்டியமை நாம் அறிந்ததே. இப்போட்டித் தொடரில் முதல் மூன்று போட்டிகளையும் இந்திய அணி வெற்றியீட்டி தொடரின் வெற்றியை உறுதிப்படுத்தியவுடன், ஊடகங்களில் வெளிவந்த செய்திகளில் இங்கிலாந்தில் ஏற்பட்ட தோல்விகளுக்கு இந்தியா பழி தீர்த்துவிட்டது என்ற சொற்பிரயோகமே பரவலாகப் பயன்படுத்தப்பட்டது.

இந்த சொற்பிரயோகத்தையே தாம் விரும்பவில்லை என்று டோனி குறிப்பிட்டுள்ளார். கனவான்களின் விளையாட்டு என்று கூறப்படுகின்ற கிரிக்கெட்டில் எதிரணிக்கு 'பதிலடி' என்ற வார்த்தைப் பிரயோகமே இதுநாள்வரை பயன்படுத்தப்பட்டு வந்தது. இருப்பினும் அண்மைக் காலமாகத்தான் பதிலடிக்குப் பதிலாக பழிதீர்த்தல் (ரிவேன்ஜ்) எனும் சொற்பிரயோகம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

டோனியின் கருத்தினை ஊடகங்கள் கவனத்தில் கொண்டால் இனிவரும் காலங்களில் இதில் மாற்றம் வரலாம் என்று எதிர்பார்க்க முடியும்.

# உலகக் கிண்ண கால்பந்தாட்டம் 2014 இல் பிரேஸிலில்...

அடுத்த உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் 2014 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ளது. பிரேஸில் நாட்டில் ஜூன் மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இப்போட்டிகள் ஜூலை மாதம் 13 ஆம் திகதிவரை நடைபெறும். 32 நாடுகள் கலந்துகொள்ளவுள்ள இப்போட்டிகளின் முதல் சுற்றுப்போட்டிகள் பல்வேறு நகரங்களில் நடைபெறவுள்ளதுடன், அரையிறுதிப் போட்டிகள் ஜூலை மாதம் 8 ஆம் 9 ஆம் திகதிகளில் முறையே பெலோ ஹரி சன்டே, மற்றும் சபேல் ஆகிய நகரங்களில் நடைபெறவுள்ளதுடன், இறுதிப்போட்டி ஜூலை மாதம் 13 ஆம் திகதியன்று ரியொடி ஜெனிரோவில் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




# சுழல் பந்துவீச்சிற்கு டெண்டுல்கர் சிறப்பாக முகம் கொடுப்பார்

## டீன்ஜோன்ஸ்


சுழல்பந்து வீச்சிற்கு சமயோசிதமாக முகம்கொடுத்து துடுப்பெடுத்தாடக்கூடிய வல்லமையைக்கொண்ட துடுப்பாட்ட வீரர் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர்தான் என்று அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் டீன் ஜோன்ஸ் தெரிவித்துள்ளார்.





பத்திரிகையொன்றுக்கு அளித்துள்ள பேட்டியொன்றிலேயே இக்கருத்தினை அவர் தெரிவித்துள்ளார். மேலும் தெரிவித்துள்ள அவர், சுழல்பந்து வீச்சிற்கு சிறப்பாக முகம்கொடுப்போரில் மே.இ.தீவுகளின் பிரயன் லாரா, பாகிஸ்தானின் ஜாவிட் மியன்டாட் ஆகியோர் டெண்டுல்கருக்கு அடுத்த இடத்திலேயே உள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளதுடன், பந்துகள் அதிகமாகத் திரும்பக்கூடிய ஆடுகளங்களில் அவுஸ்திரேலியாவின் 'ஷேன் வோர்ன் வீசும் பந்தினை முன்னங்காலில் ஆடுவதிலும், அவ்வாறே, பின்னங்காலில் ஆடுவதிலும் டெண்டுல்கர் தனித்துவமானவர். இவ்வாறு சிறப்பாகத் துடுப்பெடுத்தாடக்கூடிய ஒரு வீரர் டெண்டுல்கர்தான். ஆனால், எவரையும் எல்லாக் காலத்திற்கும் சிறந்த வீரர் என்று கூறமுடியாது என்றும் டீன் ஜோன்ஸ் குறிப்பிட்டுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# விண்வெளிச் சுற்றுலா சென்று தங்கக்கூடிய

# 'ரஷ்ய விண்வெளி ஹோட்டல்'

அமைதியானதோர் இடத்திற்கு சுற்றுலா சென்று விடுமுறையைக் கழிக்க நம்மில் பலரும் விரும்புவர். அதுவும் அந்த சுற்றுலாப்பயணம் விண்வெளியை நோக்கியதாகவே அமைந்திருக்கும் என்றால், அதற்கான ஆர்வம் அனைவருக்கும் ஏற்பட்டுவிடும். ஆனால், அந்த விண்வெளிச் சுற்றுலாவை மேற்கொள்ள விரும்பினால், பெரும் தொகையான பணம் இருக்க வேண்டும். அவ்வாறு பணவசதி படைத்திருந்தால், உங்கள் எதிர்பார்ப்பை அடையும் நாள் வெகு தொலைவில் இல்லை







ரஷ்ய பொறியியலாளர்கள் விண்வெளிக்குச் சுற்றுலாப்பயணத்தை மேற்கொள்பவர்களுக்காக, விண்வெளி ஹோட்டலொன்றை நிர்மாணிக்க தற்போதளவில் திட்டமிட்டுள்ளனர். பூமியிலுள்ள ஹோட்டல்களைப் போலன்றி அதிக வசதிகளைக் கொண்டமையவுள்ள இந்த சொகுசு ஹோட்டல், விண்வெளியில் புவிச் சுற்றுப் பாதையில் வலம்வரவுள்ளது. விண்வெளித்துறையில் பெரும் புரட்சிகளை செய்து வரும் அமெரிக்காவிற்கு சவால்விடும் வகையிலேயே ரஷ்யர்கள் இத்திட்டத்தை நிறைவேற்றவுள்ளனர். அத்துடன், விண்வெளிச் சுற்றுலாவை மேற்கொள்வதற்கும் விண்வெளி ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் பேராவல் கொண்டுள்ளோரின் எண்ணங்களை நிறைவேற்றும் விதமாகவே ரஷ்யர்கள் இந்த நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளனர். இது பற்றி நாம் ஏற்கனவே 'விஜய்'யில் குறிப்பிட்டிருந்தோம்.

விண்வெளி ஓடத்துடன் இணைந்ததான இந்த விண்வெளி ஹோட்டலை நிர்மாணிப்பதற்கான திட்டத்தை ரஷ்யாவைச் சேர்ந்த ரஷ்ய ஓர்பிடல் டெக்னோலஜிஸ் என்ற நிறுவனம் முன்னெடுக்கவுள்ளது. 'ரஷ்ய விண்வெளி ஹோட்டல்' என அது பொதுவாக அழைக்கப்பட்டாலும், சி.எஸ்.எஸ்.(CSS-Commercial Space Station) அதாவது, 'வர்த்தக ரீதியிலான விண்வெளி நிலையம் என அதற்கு உத்தியோகபூர்வமாக பெயரிடப்பட்டுள்ளது. இந்த விண்வெளி நிலையமானது, சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு சமமாக அமைந்தாலும் அதிலுள்ளதைவிட, அதிகமான வசதிகளை இந்த ஹோட்டல் கொண்டிருக்கும் எனக் கூறப்படுகின்றது.

இந்த விண்வெளிஹோட்டலில் விண்வெளி வீரர்களுக்கு இடமில்லை. விண்வெளிச் சுற்றலா செல்லும் பயணிகளுக்கு மாத்திரமே அது உரித்தானது என ரஷ்ய பொறியியலாளர்கள் கூறுகின்றனர். எனினும், திடீர் ஆபத்து அல்லது அவசர இடர்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் விண்வெளி வீரர்கள் இந்த ஹோட்டலைப் பயன்படுத்த முடியும் என ரஷ்ய பொறியியலாளர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இந்த விண்வெளி ஹோட்டலின் நிர்மாணப்பணிகளை இவ்வருடத்தில் ஆரம்பித்து, 2016 ஆம் ஆண்டளவில் நிறைவு செய்ய பொறியியலாளர்கள் திட்டமிட்டுள்ளனர். இதன் நிர்மாணப் பணிகளுக்குத் தேவையான சகல பொருட்களும் ரஷ்யாவின் சோயுஸ் ரொக்கெட்டின் அனுசரணையுடன் நடைபெறும்.





இதில் ஏழு சுற்றுலாப்பயணிகள் ஒரே நேரத்தில் தங்கியிருந்தவாறு விண்வெளியின் அற்புதங்களைக் கண்டு களிக்கலாம். அதற்கு வசதியாக ஏழு சிறிய அறைகள் அமைக்கப்படும். அந்த அறைகளின் சுவர்கள் கண்ணாடிகளால் அமைக்கப்படுவதோடு, அதிலிருந்தவாறு பூமியின் அழகையும் விண்வெளியின் அழகையும் தெளிவாக கண்டுகொள்ளக்கூடியதாக இருக்கும்.அத்துடன், இந்த விண்வெளி ஹோட்டலுக்கு ரஷ்யாவின் சோயுஸ் ரொக்கெட்டுகளின்மூலம் சென்றடையலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## சுற்றுலாக் கட்டணம்

விண்வெளி ஹோட்டலில் ஐந்து நாட்கள் தங்கியிருந்து விடுமுறையைக் கழிப்பதற்கு 100,000 அமெரிக்க டொலர்கள் கட்டணமாக அறவிடப்படும். இரண்டு நாட்கள் அடங்கிய விண்வெளிப் பயணத்திற்கு 5,00,000 அமெரிக்க டொலர்கள் கட்டணமாக அறவிடப்படும்.


## விண்வெளி ஹோட்டலிலுள்ள வசதிகள்

புவி ஈர்ப்புச்சக்தியில் இருந்து விடுபட்டு விண்வெளியில் இருக்கும் சுற்றுலாப்பயணிகள் விண்வெளி ஹோட்டலில் தாம் விரும்பியவாறு நித்திரை செய்ய செங்குத்தாகவும் கிடையாகவும் படுக்கைகள் தயாரிக்கப்படும். செங்குத்தாக நித்திரை செய்வதாயின், ஈர்ப்பு விசையிலிருந்து விடுபட்டு மிதக்கும் சந்தர்ப்பத்தைத் தவிர்க்க கட்டிலில் உள்ள விசேட படுக்கை நாடாவை அணிய வேண்டும் என பொறியியலாளர்கள் கூறுகின்றனர்.

விண்வெளி ஹோட்டலில் இருப்பவர்களுக்கு விசேடமான முறையொன்றின் மூலம் குளியலை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்க ரஷ்ய விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.

பொதுவாக, விண்வெளி வீரர்கள் தமது விண்வெளிப் பயணத்தின் போது, விசேடமாக பெக்கட் செய்யப்பட்ட உணவுகள் மற்றும் உணவு வில்லைகளையே உணவாகக்கொள்வர். ஆனால், விண்வெளி ஹோட்டலில் தங்கவுள்ள விண்வெளிச் சுற்றுலாப் பயணிகளுக்கான அனைத்து உணவுகளும் புவியிலேயே தயாரிக்கப்படுவதோடு, அவை சோயுஸ் ரொக்கெட் மூலம் விண்வெளி ஹோட்டலுக்கு அனுப்பப்படும். பின்னர் அந்த உணவுகள் மைக்ரோவேவ் அடுப்பில் சூடாக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு பரிமாறப்படவுள்ளன. இவை தவிர, குளிரூட்டப்பட்ட தேநீர், குடிநீர் மற்றும் பழச்சாறு என்பவற்றைக்கூட சுற்றுலாப்பயணிகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன், கழிவறைகளில் நீருக்குப் பதிலாக அழுத்தத்துடன்கூடிய வாயுச் சுருள் பயன்படுத்தப்படவுள்ளது. ஒவ்வொரு துளி நீரும் மீள்சுழற்சி செய்யப்பட்டு மீள் பாவனைக்கு உட்படுத்தப்படும். ஆனால், எக்காரணம் கொண்டும் சுற்றுலாப்பயணிகளின் சிறுநீரோ, வியர்வையோ மீள் சுழற்சி செய்யப்பட மாட்டாது என பொறியியலாளர்கள் உறுதியளிக்கின்றனர். அத்துடன், அறைகளில் உள்ள பக்றீரியா மற்றும் நோய்க்கிருமிகள் போன்றவை காற்று மற்றும் வடிகட்டும் முறைகளின் மூலம் அகற்றப்பட்டு சுத்தப்படுத்தப்படும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையாளர்: புற்றுநோய் கண்டுபிடிப்பு


(கி.பி.1867-1928)

டென்மார்க்கைச் சேர்ந்தவரான ஜொஹென்னஸ் அன்ட்ரியாஸ் க்ரிப் ஃபிபிகர் 1867 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி பிறந்தார். சிறு வயதிலிருந்தே கல்வியில் சிறந்து விளங்கிய இவர், தமது இளம் வயதிலேயே பல நோய்கள் குறித்த ஆய்வுகளில் ஈடுபட்டார். உலகின் எந்த தட்பவெப்பத்திலும் வாழுமாறு படைக்கப்பட்ட நெமடொட் (Nematode) என அறியப்பட்டுள்ள வட்ட சுருள் புழுக்கள் பற்றிய ஆய்விலும் இவர் ஈடுபட்டார். இவை ஒரு நுண்கிருமி வகையாகும். நுணுக்குக்காட்டியில் மட்டுமே தெரியவல்ல மிக நுண்ணிய அளவு முதல், வெறும் கண்களுக்குத் தெரியும் அளவு வரை விதவிதமான உருவ அமைப்பை இப்புழுக்கள் கொண்டுள்ளன.

ஒருநாள் தமது ஆய்வுகூடத்தில் எலிகளால் ஏற்படும் காசநோய் பற்றிய ஆய்வுகளை ஃபிபிகர் மேற்கொண்டிருந்தார். அதன்போது, சில எலிகளில் புற்றுநோய் கட்டிகள் இருப்பதைக் கண்டார். உடனடியாக அந்தக் கட்டிகள்மீது தனது கவனத்தைச் செலுத்தி ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். அதன்படி, மேற்குறித்த வட்ட சுருள் புழுக்கள்தான் எலிகளின் உடலில் உருவான கட்டிகளின் அனைத்து திசுக்களையும் செய விழக்க செய்து புற்றுநோயாக மாற்றுகின்றது என தனது ஆய் வறிக்கையை வெளியிட்டார். இப்புழுக்கள்தான் புற்றுநோய்க்கான காரணம் என்பது ஃபிபிகரின் எண்ணமாக இருந்தபோதிலும், குறிப்பிட்ட அந்த எலிகள் விற்றமின் A

## ஜொஹென்னஸ் அன்ட்ரியாஸ் க்ரிப் ஃபிபிகர்

குறைபாட்டால் அவதிப்பட்டவை என்றும் அதனால் உருவான கட்டிகளின் தொடர் எரிச்சலே அங்கிருந்த திசுக்களை அழித்து புற்றுநோய்க் கட்டிகளை உருவாக்கிவிட்டன என்றும் மற்றொரு விஞ்ஞானபூர்வமான கருத்தும் உள்ளது.

திசுக்களின் காயமும் அதனால் திசுக்கள் மரணிப்பதும் புற்று நோய்க்குக் காரணம் என்பதை முன்வைத்த இவர் திசு மரணமே புற்றுநோய், என காரணம் கூறியதற்காகவும் மேலும் வட்ட சுருள் புழுக்களைக் கண்டறிந்ததற்காகவும் இவருக்கு 1926 இல் நொபெல் பரிசு வழங்கப்பட்டது.

பிற்காலத்தில் புழுக்களுக்கும் புற்றுநோய்க்குமான தொடர்பு ஒரு முக்கிய பிரச்சினையே இல்லை என்று ஒதுக்கப்பட்டாலும் இவர் கூறிய 'திசு மரணமே புற்றுநோய்' என்ற தீர்வு புற்றுநோய் ஆய்வில் இன்றும் வழிகாட்டிக்கொண்டிருக்கும் ஒரு மைல்கல் லாகும். இத்தகைய சாதனைகள் புரிந்த ஜொஹென்னஸ் ஃபிபிகர் 1928 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 30 ஆம் திகதி தனது 61 ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார். (ஆர்.ஜே)

## வினாத்தாள் -II விடைகள்

(ஒக்டோபர் 26, நொவெம்பர் 02 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)

01) i. இடர் ii. கண்+நீர்
iii. மனம் உருகுதல்/ மனம் கசிதல்/மனம் நெகிழ்தல்
iv. இடர் வரும்போதும்/உள்ளம் இரங்கிடும்போதும்
v. மாந்தர்/அப்பா

02) i. வளி ii. பானம்

03) i. சூரியனைக் கண்டதும் தாமரை மலர் மலர்ந்தது.
ii. காற்றில் மரங்கள் அசைந்து ஆடின.

04) i. மனதை வருந்தச் செய்தல்/ மனம் நோகப் பேசுதல்
ii. கொடுத்த வாக்கை மீறல்

05) i. சுயநலவாதி ii. அநாதை

06) i. வறுமையிற் செம்மை/ வறுமையில் செம்மை
ii. ஒற்றுமையே பலம்

07) i. தன்மைப் பன்மை ii. படர்க்கை ஒருமை

08) i. சிவநந்தினி துணிப்பொம்மைகள் செய்வதைக் கூர்ந்து கவனித்தாள்.

09) i. Teacher ii. Hospital

10) i. Rabbit ii. Sun flower

11) i. நான் புத்தகம் வாசிக்கிறேன்.
ii. தயவுசெய்து உங்கள் பெட்டியைத் திறவுங்கள்.


12) i. அ(ப்)பி கமு.
ii. (அ) அண்ணா கடைக்குப் போனார்.
(ஆ) நான் பாடம் படிக்கிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| 13) 4 | 21) 3 | 29) 3 | 37) 1 | |
| 14) 2 | 22) 1 | 30) 3 | 38) 3 | |
| 15) 1 | 23) 4 | 31) 3 | 39) 4 | |
| 16) 4 | 24) 3 | 32) 2 | 40) 4 | |
| 17) 3 | 25) 1 | 33) 3 | 41) 3 | |
| 18) 2 | 26) 4 | 34) 3 | 42) (i) 7320 | `(ii) 2037 |
| 19) 2 | 27) 2 | 35) 2 | 43) (i) 600 | |
| 20) 2 | 28) 4 | 36) 2 | (ii) பத்துக்கள் | |

44) முப்பதாயிரத்து நூற்று நாற்பத்தேழு

| | | | |
|---|---|---|---|
| 45) 4914 | 46) (i). 105 பேருக்கு. | (ii) 4 எஞ்சியிருக்கும் | |
| 47) 8m | 48) ரூ 47.50 | 49) (i) 12 | (ii)4 |
| 50) 034000 | 51) ரூபாய் 270.00 | 52) (i) 8 | (ii) 16 |
| 53) 2kg 250g | 54) (i) ரூபாய் 500.00 | (ii) ரூபாய் 50.00 | |

55) (i) 35 மாணவர்கள்
(ii)



56) * ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது ஐந்து சொற்கள் இருக்க வேண்டும்.
* எழுவாய், பயனிலை தொடர்பு திருத்தமாக இருக்க வேண்டும்.

## நச்சுத் தாவரங்கள்

பல தாவரங்கள் தம்மை விலங்குகள் உண்ணாமல் பாதுகாத்துக்கொள்ள நஞ்சை உற்பத்தி செய்கின்றன. 'ஸ்டிங் கிங் நெட்லெஸ்' அத்தகைய ஒரு செடியாகும். இதில் சின்னச்சின்ன ரோமங்கள் தேள் கொடுக்குப் போல் காட் சியளிக்கின்றன. ஏதேனும் பிரா ணிகள் அதில் உராயும்போது, இந்த மயிர் அந்தப் பிராணியின் தோலில் குத்தி விஷத்தைப் பாய்ச்சுகிறது. இத்தாவர நஞ்சி னால் நமைச்சல் ஏற்பட்டு தடிப் பும் ஏற்படுகிறது. ஆனால், அது சீக்கிரமே மறைந்து விடுகின்றது. ஆனால், அமெரிக்க நச்சுச் செடி யாகிய ஐவிமூலம் பெரி யளவிலான வீக்கம் ஏற்படுகின்றது. சில தாவரங்களை உண்பதால் விஷம் பரவு கின்றது. பொதுவாக நஞ்சுள்ள தாவரங்களில் பட்டர் கப், யூ, ஐவி, பிரிவேட் பேரீஸ், லேபர்னம் ஹேம்லொக், நச்சு நைட்ஷல், மரண நைட்ஷேட் ஆகியனவும் அடங்கும்.





## விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 4346
க.ஸஷ்மிதா, விகாரை வீதி, திருகோணமலை.


அங்.இல: 4347
ஹுஸைன் அஹ்மட், பொல்கொல்ல தோட்டம், பொல்கொல்ல.


அங்.இல: 4348
எஸ்.பவதாரணி, ஒலிரூட் வீதி, தலவாக்கலை.


அங்.இல: 4349
ஏ.எஃப்.நுஹா, ஹய்ரத் வீதி, வாழைச்சேனை-05.


அங்.இல: 4350
அஹ்மத் ரஸீன், கபடகொட, பேருவளை.


அங்.இல: 4351
ஞா.டயானா, மடுக்கரை, நானாட்டான்.


அங்.இல: 4352
டி.உதயனி, கந்தலோயா தோட்டம், நாவலப்பிட்டி.


அங்.இல: 4353
என்.எஃப்.பர்வின், நீரெல்ல, அக்குறணை.


அங்.இல: 4354
வை.மோகனப்பிரியன், ஹட்டன்.


அங்.இல: 4355
எம். அஸ்மின், தில்லையடி, புத்தளம்.

படத்தை இங்கே ஒட்டவும்



விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:.................................

முகவரி:.................................

.................................

பாடசாலை:.................................

வகுப்பு:.................................

திகதி:.................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கடல் வாழ் உயிரினங்கள் எழுப்பும் ஒலி குறித்து ஆய்வு

கடலில் வாழும் உயிரினங்கள் கடலில் பயணிக்கும்போது, தமக்குள் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்வதற்காக, சிறிய சத்தங்களை ஏற்படுத்திக்கொள்கின்றன. சில திமிங்கில வகைகள் முனங்குதல் போலவும் கத்துவது போலவும் ஒலியெழுப்பி ஒன்றுடன் ஒன்று தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதாகவும் கூறப்படுகின்றது.

ஆயினும், இன்றளவில் கடல் பரப்பில் மனித செயற்பாடுகள் அதிகரித்துள்ளமை கடல்வாழ் உயிரினங்களின் தொடர்பாடலுக்கு பாரிய அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் அண்மைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.


மேலும், இத்தகைய மனித செயற்பாடுகளினால் கடல்வாழ் உயிரினங்கள் அதிகளவில் அழிந்து வருவதனால் அவை பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்ற





னர். இக்கடல்வாழ் உயிரினங்களின் தகவல் தொடர்பில் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் கடல்வாழ் உயிரின அழிவுகள் குறித்தும் கடல் ஆராய்ச்சியாளர்கள் நீண்டகாலமாகவே தொடர் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதுபற்றி அண்மையில் பெரிஸ் நகரில் உள்ள யுனெஸ்கோ அமைப்பின் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

# சுனாமியின் தாக்குதலைக் கண்டறிய புதிய முறை




அமெரிக்காவின் இல்லினொய்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் மகேலா என்பவரது தலைமையில் சுனாமி பற்றிய ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. இதில் பல்வேறு முடிவுகள் தெரியவந்துள்ளன. சுனாமி வருவதற்கு முன்னர் பூமியிலிருந்து 250 கி.மீற்றர் உயரத்தில் காற்று மண்டலத்தில் சில மாறுபாடுகள் ஏற்பட்டுள்ளமை ஆய்வுகளின்மூலம் தெரியவந்துள்ளது. வழமையாக சூரியக் கதிர்கள் வாயு மண்டலத்தின் மூலக்கூறுகளை ஊடுருவிச் செல்லும்பொழுது உள்ள காற்றின் அடர்த்தியிலும் சுனாமியின் போது ஏற்படும் காற்றின் அடர்த்தியிலும் ஏற்படும் மாற்றங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

இதனை பேராசிரியர் மகேலா வரைபடத்தினூடாக விளக்கிக் கூறியுள்ளார். வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள சிவப்பு நிறக் கோடுகள் சுனாமி தாக்குதலைக் குறிக்கின்றது. எனவே, சுனாமி வருவதற்கு முன்பே காற்றில் ஏற்படும் இத்தகைய மாற்றத்தைக் கருத்திற்கொண்டு அதற்கேற்ப முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க முடியும் என மேற்படி ஆய்வுக் குழுவினர் தெரிவிக்கின்றனர்.



# அதிகமாகச் சிதறடிக்கப்படும் நீல நிறம்

வானத்தில் நாம் காணும் நீல நிறம் கடலின் பிரதிபலிப்பல்ல. மாறாக, கடல்தான் வானத்தைப் பிரதிபலித்து நீல நிறத்தைப் பெறுகின்றது. விண்வெளியில் எடுத்த புகைப்படங்களை ஆய்வு செய்தால் சூரிய வெளிச்சம் படும் பொருட்கள் தவிர, சுற்றிலும் கறுப்பாகவே காணப்படுகின்றது.



எனினும், பூமியிலிருந்து பார்க்கும்போது, மட்டும் வானம் நீல நிறமாகத் தெரிவதன் காரணம் பூமியின் மேல்பகுதியில் உள்ள காற்று மண்டலமேயாகும். இந்த சூரியஒளியானது, அனைத்து வண்ணங்களையுமே பிரதிபலிக்கின்றது.





எனினும், இந்த வண்ணங்களில் நீல நிறம் மிக அதிக துடிப்புடனும், சிவப்பு நிறம் மிகக் குறைந்த துடிப்புடனும் காணப்படுகின்றது. ஒளி, காற்று மண்டலத்தில் இடையூறில்லாமல் பயணம் செய்தாலும் காற்றிலுள்ள அணு மூலக்கூறுகள், நீர்த்துளிகள், பனிமூட்டம் போன்றவை ஒளியைச் சிதறடிக்கின்றன. இவ்வாறு நடைபெறும்போது, மிக அதிக துடிப்புடைய நீல நிறம் அதிகமாக சிதறடிக்கப்படுகின்றது.

இவ்வாறு காற்று மண்டலத்தில் பலமாக சிதறடிக்கப்படும் நீல நிறமே ஏனைய நிறங்களைவிட, பெருமளவில் எமது கண்களுக்குப் புலப்படுகின்றது. எனவேதான், வானம் நீல நிறமாகக் காட்சி தருகின்றது. இரவில் நிலவின் ஒளி, நட்சத்திரங்களின் ஒளி ஆகியவை பலம் குறைந்த நிலையில் இருப்பதால், அந்த சிதறல்கள் நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. சூரியனில் இருந்து வரும் ஒளிச் சிதறல்களை மட்டுமே எம்மால் காண முடிகின்றது.

# உயரும் கடல்நீர் மட்டம்



புவி வெப்பமயமாகி வருவதனால் அடுத்து வரும் 90 ஆண்டுகளுக்குள் கடல்நீர் மட்டம் 2 அடிகள் வரை உயரும் என கொபன்ஹேகன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து வெளிவிடப்படும் காபன் டை ஒக்சைட் மற்றும் ஏனைய சுற்றுச்சூழல் சீர்கேடுகள் காரணமாக, புவி வேகமாக வெப்பமாகி வருகின்றது.

அட்லாண்டிக் கடல் பகுதியில் உள்ள பனிப்பாறைகள் வேகமாக உருகி வருவதனால் கடல்நீர் மட்டம் உயர்ந்து வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தற்போதைய நிலை தொடர்ந்தால் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் கடல் மட்டம் 2 அடியும் அதற்கடுத்த 4 ஆண்டுகளில் தாழ் வான பகுதிகள் கடலில் மூழ்கும் அபாயம் உள்ளதாகவும் கூறப்படுகின்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'போலி மென்பொருள்' பாவனையால் கோடிக்கணக்கான வருமான இழப்பு

## ஆய்வு அறிக்கை தெரிவிப்பு




கணினியுடன் இன்றியமையாத ஒன்றாக இருப்பது மென்பொருள் ஆகும் (Software). இத்தகைய முக்கியத்துவம் மிக்க மென்பொருட்களில் அநேகமானவை இன்று போலியான அல்லது நகலான மென்பொருட்களாக இருப்பது உலகளாவிய ரீதியில் பல நாடுகளுக்கு வர்த்தக ரீதியில் பாரிய இழப்பை ஏற்படுத்தியிருப்பதாக ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

'பிஸ்னஸ் சொஃப்ட்வெயர் எலாயன்ஸ்' (Buisness software alliance) என்ற ஆய்வு நிறுவனம் மேற்கொண்ட ஆய்வுகளின் மூலமே இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆய்வு முடிவுகளின்படி சட்டவிரோதமான போலி மென் பொருட்களின் பாவனையை குறையச் செய்தால், அதன் பயனாக லட்சக் கணக்கில் புதிய வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புக் கிட்டும்' என்றும், இந்த அறிக்கையின்படி தற்போது பாவனையிலுள்ள சட்டவிரோதமான போலி மென்பொருட்களை 10 வீதத்தால் குறைத்தால் 2013 ஆம் ஆண்டளவில் தொழிநுட்பத்துறையில் 5 லட்சம் வேலை வாய்ப்புக்களை புதிதாக உருவாக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.








உலகிலுள்ள 42 நாடுகளில் இது தொடர்பான ஆய்வுகள் 2009 ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. உலகளவில் 93 வீதம் கணினி மென்பொருள் வர்த்தக சந்தையை கொண்டுள்ள நாடுகள் இந்த 42 நாடுகளேயாகும். இதற்கமைய குறிப்பிட்ட 'பிஸ்னஸ் சொஃப்ட்வெயர் எலைன்ஸ்' ஆய்வு நிறுவனத்தின் சார்பாக 'ஐடிஸி' (IDC) என்ற ஆய்வு நிறுவனம் இந்த ஆய்வுகளை நடத்தியது. இந்த ஆய்விற்கமைய பாவனையிலுள்ள பத்து கணினிகளில் நான்கு கணினிகள் சட்டவிரோதமான போலி மென்பொருட்களை கொண்டதாகவே உள்ளன என்று தெரியவந்துள்ளது.

சரியான விகிதாசாரத்தில் குறிப்பிடுவதானால் உலகிலுள்ள கணினிகளில் 42 வீதமானவை போலியான மென்பொருட்களையே கொண்டிருக்கின்றன. இவ்வாறான சட்டவிரோத போலி மென்பொருள் பாவனையை தடுப்பதற்கு அவ்வவ் நாடுகள் நடவடிக்கைகளை மேற்கொண்டால் 2013 ஆம் ஆண்டை அடைகையில் மொத்த அளவில் கிடைக்கக்கூடிய வரி வருமானம் 3200 கோடி டொலர்கள் (32 பில்லியன்) என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.



இவ்வாறான சட்டவிரோதமான போலி மென்பொருட்களை கள்ளச் சந்தையில் விற்பனை செய்வது இன்று சகஜமாக நடைபெற்று வருகின்றது. இதில் விசேட அம்சம் என்னவென்றால் இவற்றை அசல் மென்பொருட்கள் என்ற தராதரத்தில் உருவாக்கி விற்பனை செய்வதில் வர்த்தகர்கள் மிகவும் நுட்சமமாக ஈடுபட்டுள்ளனர் என்பதேயாகும். அடுத்த விடயம், இவ்வாறான சட்டவிரோதமான வர்த்தக சந்தையை தடுத்து நிறுத்தி போலி மென்பொருட்களின் விற்பனையை தடுப்பதற்கு சட்டத்தால் மட்டும் முடியாது என்று 'சொஃப்ட்வெயர் எலயன்ஸ்' ஆய்வு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இதற்கு முதலில் கணினி பாவனையாளர்களை தெளிவுபடுத்துவதற்கான திட்டமிட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டியதுடன், அவர்கள் தாங்களாகவே போலி மென்பொருள் பாவனையிலிருந்து தம்மை தூர விலக்கிக்கொள்ளக்கூடிய சூழலை உருவாக்க வேண்டும் என்றும் மேலும் இந்நிறுவனம் தெரிவித்துள்ளது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2011, நவம்பர் மாதம் 02 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday November 02, 2011.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org